காஞ்சி

ஆசிரியர்
அண்ணாதுரை

3-7-66
விலை 20 காசு

கேள்வி--பதில்!

(1) படித்தப் பெண்கள் வேலைக்குச் செல்வதைப்பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

நான் என்ன கருதுகிறேன் என்பதுபற்றிப் பிறகு ஆகட்டும். அரசாங்கம் என்ன கருதுகிறது என்று முதலில் தெரிந்து கொள்ளுங்கள். கடந்த கிழமை 'ஆகாஷ்வாணியின் மதராஸ் வானொலி நிலையம்' என்ன தெரிவித்தது தெரியுமா? படித்தப் பெண்கள், பொருளாதார காரணங்களை முன்னிட்டோ, பொழுதுபோக்குக் காரணங்களை முன்னிட்டோ வேலைக்குச் செல்வதைப்பற்றி நன்கு சிந்திக்க வேண்டும் என்றும், வீட்டுவேலைகளுடன், படித்த இளைஞர்களது நாட்டுவேலையும் பெண்கள் வேலைக்குச் செல்வதால் பாதிக்கப்படுவதாகவும், அது அறிவித்தது. 'ஆகாஷ்வாணி'யின் இந்தக் கருத்து, 'அகில இந்தியா'க்களின் கருத்து அல்லவா! தெரிந்து கொள்ளுங்கள்.

(2) எதிர்க்கட்சிகளிடமிருந்து காங்கிரஸ் என்ன எதிர்பார்க்கிறது?

எதிர்க்கட்சிகள்யாவும் பூண்டோடு ஒழிந்து "இந்தா! விபீஷணா! பட்டம்!! என்று, விண்ணுள்ளளவும்மண்ணுள்ளளவும் தன்னையே நாடாளும் பொறுப்பில் அமர்த்தாதா என்று எதிர்பார்க்கிறதுபோலும்! அதனால் தான் ஒரு அரசியல் கட்சியின் ஜனநாயக ரீதியான ஒரு தீர்மானத்தை, 'முட்டாள்தனமானது'—என்று எழுதி, படித்துப்பார்த்துப் பூரிப்படைகிறது காங்கிரஸ்!

(3) ரூபாயின் மதிப்புக் குறைக்கப்படவில்லை; அது மாற்றப்பட்டிருக்கிறது என்கிறார் ஒருவர். இதற்கு என்ன பொருள்?

பெருமாளுக்குக் கண் தெரியவில்லை என்பது தப்பு; அவரது பார்வையில்தான் பழுது ஏற்பட்டிருக்கிறது என்றால் என்ன பொருளோ அதே பொருள் தான் இதற்கும்!

(4) ஜூன் மாதத்தில் மட்டும் மூன்று பயங்கரமான இரயில் விபத்துக்கள் ஏற்பட்டுள்ளது எதைக் குறிக்கிறது?

இதில் என் கருத்தைவிட, பொதுமக்களின் கருத்தை என் காதால் கேட்டதைச் சொல்கிறேன். பொருந்துகிறதா என்று பாருங்கள். "மக்களுக்குப் போதிய அளவு உணவுதர முடியவில்லை; குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை ஒழுங்காக அமுல்படுத்த இயலவில்லை; திட்டங்கள் அனைத்திலும் தோல்வி! வேறு என்னதான் செய்வார்கள்? இப்படியாவது ஜனப்பெருக்கத்தைக் குறைக்கலாமென **"இரயில்கள்" —எல்லாம் மாநாடு கூடி** முடிவெடுத்துக்கொண்டு விட்டன.

(5) இரயில் விபத்துக்கள் தவிர்க்கப்பட முடியாதனவா என்ன?

காங்கிரசின் சர்வாதிகார வெறித்தனத்தை சரித்துச் சாய்த்தாலல்லாமல், எந்த விபத்துக்களையுமே தவிர்க்க முடியாது ஐயா! தவிர்க்க முடியாது!! அது மட்டுமல்ல, மக்களை யெல்லாம் ஒரு பொது இடத்தில் கூட்டி வைத்து 'துப்பாக்கிச்சூடு' என்று சொல்லவில்லை, தடியடி நடத்தி என்றுகூடக் கூறவில்லை, 'பட்டினி' போட்டே 'கொலை' செய்தாலும்கூட அதையும் தவிர்க்க இயலாதையா, தவிர்க்க இயலாது!

(6) அவசியமானால் நேருவின் பாதையிலிருந்து விலகிச் செல்லவும் தயங்கமாட்டேன் என்று கூறி இருக்கிறாரே பிரதமர் இந்திராகாந்தி! கவனித்தீரா?

காலங் கடந்து, கலனாகிப் போன அறிவிப்பு ஐயா இது! நேருவின் பாதையிலிருந்து விலகி அல்ல—சரிந்து விழுந்து பல திங்களாயிற்று. உர பேர ஒப்பந்தம், இந்தியா—யு. எஸ். கூட்டு நிறுவனம், வெளிநாட்டாரின் தாராள தொழில் அனுமதி, கட்டுப்பாடுகள் தளர்ச்சி, நாணய மதிப்புக் குறைப்பு—என்பதெல்லாம் என்ன என்று எண்ணிப் பாருங்களேன்!

(7) நாணய மதிப்புக் குறைப்பினால் இந்தியா — இரஷ்யா உறவு பாதிக்கப்படும் என்கிறார்களே, சரியா?

உறவு பாதிக்கப்படமாட்டாது வெளிப்படையாக. ஆனால் வாணிகம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. மதிப்புக் குறைப்புக்கு முன் இருந்த நிர்ணய விதப்படி 'வாணிக ஒப்பந்தங்களை' நிறைவேற்றக் கூறுகிறது இரஷ்யா! எனக்கு ஒரு சந்தேகம்; அண்மைக் காலம் முதல் இரஷ்யா — பாகிஸ்தான் நெருக்கம் மிகுந்து வருகிறது. ஆயுத உதவிகளைத் தாராளமாக்கி இருக்கிறது இரஷ்யா. 'சூ—அயூப்' நெருக்கம் மிகுதியாக மிகுதியாக, இரஷ்யாவின் கை தாராளமாக நீளுகிறது பாகிஸ்தான் பக்கம். இதன் ஒரு காரணமாகவும் இந்தியாவின் பக்கம் நீண்டிருந்த கை, மெள்ள மெள்ள மடக்கப்படுகிறது! நாணய மதிப்புக் குறைப்பை ஒரு காரணமாக்கிக் கொண்டு விட்டது என்று மட்டுமே சொல்ல முடியும்.

(8) காமராசரை காணவில்லையே, எங்கேனும் வெளிநாடு போய்விட்டாரா என்ன?

நீர் ஒரு அப்பாவி ஐயா! நாணய மதிப்புக் குறைப்பு என்ற அறிவிப்பு வந்த வேகத்தில், தன் வெளிநாட்டுப் பயணங்களைத் தள்ளிவைத்து விட்டார் காமராசர் என்று ஒரு செய்தி வந்ததே கவனிக்கவில்லையா! பயணத்தைத் தள்ளிவைக்கக் கேட்டுக் கடிதம் வந்திருந்ததாகவும் ஒரு செய்தி உலவுகிறது. இது போகட்டும். 'மதிப்பு'க் குறைப்பு அதிர்ச்சியிலிருந்து இன்னமும் அவரால் மீள முடியவில்லை. காங்கிரசுக்குள்ளே குத்துவெட்டுக்கள் மிகுந்துவிட்டன. எல்லைத் தகராறு வேறு காங்கிரசுமாநிலங்களுக்கிடையே! சண்டிகார் எனக்கா, உனக்கா சண்டை! தமிழ் நாட்டுக்கு உஜ்ஜல்சிங்கை அனுப்புவதா, வேறொருவரையா என்ற விவாதம் இவையெல்லாம் காமராசருக்குத் தீராத் தலைவலிகள். பேரும் புகழும் பெற்ற அந்த 'அகில இந்தியா'வின் அரசியல் மேதைத்தனத்திற்கு ஒரு அறை கூவல் எதையாவது பேசி, எதையாவது வாங்கிக் கட்டுவதைவிட, 'சும்மா இருப்பதே சுகம்' அல்லவா!

மக்கள் கருத்தை........

பொதுமக்களின் கருத்தைக் கண்டு பலவீனர்கள் நடுங்குகிறார்கள்; முட்டாள்கள் அத்துடன் மோதுகிறார்கள்; அறிவாளிகள் அதை எடை போட்டுப் பார்க்கிறார்கள்; சாமர்த்திய சாலிகளோ, அதை உருவாக்குகிறார்கள்.

—மேடம் ரோலண்டு

காஞ்சி

மலர் 2 | 3—7—66 | இதழ் 49

கணக்குத் தீர்க்கும் காலம்...!

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின்னர், அமெரிக்காவின் உதவியைப் பெற்ற எத்தனை நாடுகள்—அதற்கு அடிமையாகி விட்டன?
—என்று கேட்டிருக்கிறார், கோவையில், ஒரு கூட்டத்தில், அமைச்சர் திரு. சுப்பிரமணியம்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் பதவி விலகிய திரு. வி. கே. கிருஷ்ணமேனன் அண்மையில் அமெரிக்காவின் அளவுக்கு மீறிய உதவியைப் பெறுவது ஆபத்தானது; நம் சுதந்திரத்திற்குக் கேடுக் விளைவிக்கக்கூடியது! என்று பேசியதற்குப் பதில் தரும் விதத்தில் அமைச்சர் சுப்பிரமணியம் இப்படிக் கூறி இருக்கிறார்.

கூறப்பட்ட பதிலில் 'அமெரிக்க உதவி' பற்றிய எச்சரிக்கையினை விடுத்துக்கொண்டிருக்கும் இந்நாட்டு அறிவாளர்கள் அனைவருக்குமே பதில் அடங்கிக் கிடக்கிறது.

கடந்த கிழமை இந்தியப்பிரதமர் இந்திரா அம்மையார் அவர்கள் வெளியார் உதவி பற்றியப் பிரச்னைமீது பேசுகையில்,

> **வெளி உதவி என்பது, யாரும் யாருக்கும் இனாமாகக் கொடுத்து விடுவதல்ல; கடனாகக் கொடுத்து வாங்குவதுதான்; இதில் சிற்சில சுயநல நோக்கங்கள் இல்லாமலிருக்க முடியாது**

—என்று கூறி இருக்கிறார்.

அகில இந்தியக் காங்கிரசுத் தலைவர்கூட இதே கருத்தை இரண்டு திங்களுக்கு முன்னர் தெரிவித்திருக்கிறார், **அந்நிய உதவிகளில், சுயநல நோக்கங்கள் இல்லாமலில்லை'** என்று!

கடந்த ஆண்டு டிசம்பர் திங்களில் அமெரிக்க வெள்ளை மாளிகையிலிருந்து வெளியிடப்பட்ட பத்திரிகைக் குறிப்பொன்றில்—

> "இந்தியத் திட்டங்களை — சிறப்பாக இந்திய விவசாயத் திட்டங்களைப் பற்றி அமெரிக்க வல்லுநர்கள் ஐயுறுகிறார்கள்"

—என்று கூறப்பட்டுள்ளது.

அடுத்த நான்கு திங்கள்களுக்குப் பின், ஜனாதிபதி ஜான்சன், பிரபுக்கள் சபையில் 'இந்தியாவுக்கு உதவி' என்பதன்மீது பேசுகையில், இந்திய விவசாய முன்னேற்றம் கடந்த காலங்களைவிட 60- சதவீதம் உயர்ந்திருக்கிறது. முன்னேற்றப் பாதையில் நடைபயில்கிறது" என்றார்.

அதே திங்களில் வெளிவிவகார அமைச்சர் டீன் ரஸ்க் 75 சதவீதம் விவசாய முன்னேற்றம் கண்டுள்ளது என்று பேசியிருக்கிறார்.

18 ஆண்டுக் கால ஆட்சியின் சாதனைகளுக்குப் பின்னர், 'அமெரிக்க வல்லுநர்கள் ஐயுறும்' நிலையிலிருந்த விவசாயத் திட்டங்கள், 19-ஆம் ஆண்டுப் பிறந்தவுடன் ஜனாதிபதி 60 சதவீதம் உயர்ந்துவிட்டது என்றும் டீன்ரஸ்க் 75 சதவீதம் அதிகரித்திருக்கிறது என்றும் பேசுகிற அளவுக்கு— இடையில் ஏற்பட்ட மாற்றம் என்ன?

வெளி உதவிகளைப் பெறுவதால் 'இந்தியா அடிமைப்பட்டு விடாது' என்று பேசும் அமைச்சர் சுப்பிரமணியம்,

> **'இந்திய முதலாம் திட்ட இறுதியில், உணவுத்துறையில் இந்தியா தன்னிறைவு பெற்றுவிடும்; எவ்வளவு விரைவில் அந்நிய உதவிகளை நிறுத்திக்கொள்கிறோமோ அவ்வளவுக்கு இந்தியாவுக்கு நல்லது'**

—என்று அரசின் சார்பில் தரப்பட்ட விளக்கத்திற்குப் பொருள் என்ன என்பதைச் சொல்லியாக வேண்டும்.

வளர்ச்சி நிலையிலுள்ள ஒரு நாடு, ஓரளவு வெளி உதவியை நாடுவதைத் தவறு என்று எவரும் இதுவரையில் கூறியதில்லை. ஆளவந்தார்களே கூறிய கருத்துக்களைத்தான், இப்போது அளவுக்குமீறிய (உள்நோக்கம்கொண்டுள்ள) உதவிகளை நாடுவது இந்தியாவுக்கு நல்லதல்ல என்கிறார்கள் அறிவாளர்கள்.

அமைச்சருக்குக் கோபம் பொத்துக்கொண்டு வருகிறது; அங்கலாய்த்துக்கொள்கிறார்! பாய்ந்து பாய்ந்து பேசுகிறார்; காரணம்—

> அமெரிக்க உதவியைப் பெரிய அளவில் இந்தியா பெறுவதில் அமைச்சர் சுப்பிரமணியத்திற்குப் **பெரும் பங்கு** உண்டு

—என்று இங்கே, கடந்தகால அரசியலை அவ்வப்பொழுது ஆராய்ந்து பார்ப்பவர்களின் உள்மனம் உரைத்துக்கொண்டிருக்கிறது.

நாடாளும் பொறுப்பில் அமர்ந்துள்ளவர்கள், **தங்கள் ஆதிபத்திய உரிமையைக் காத்துக்கொள்ள வேண்டும்** என்ற ஒரேயொரு காரணத்துக்காக மட்டும் **உண்மைகளை மறைத்து செய்திகளைத் திரித்துக்** கூறும் கீழ் நிலைக்கு இறங்கி வந்துவிடக்கூடாது.

நாடு என்பது நிலையான ஒன்று. அதில் வாழ்வோரும், சாவோரும்—பிறப்போருமாக- நிலையானவர்கள்.

ஆனால் அமைச்சர் வேலை பார்ப்பவர்கள் வந்து வந்து போவார்கள்—வந்துபோகிற குறுகியகால அறுவடைக்காக, நாட்டின் பொதுநன்மைப் பாழ்படுத்தப்படுவதை, நாட்டு நலத்தில் உண்மையான அக்கறை கொண்டவர்கள் பார்த்துக்கொண்டு இருக்கமாட்டார்கள்.

இடித்துக் கூறவேண்டியவற்றை இடித்துத்தான் தீரவேண்டும்; தட்டிக் கேட்கவேண்டியதைத் தட்டிக் கேட்டுத்தான் தீரவேண்டும்.

செய்துவிட்ட தவறுகளின் அறுவடையை, அனுபவித்துத் தீரவேண்டியவர்கள் சாதாரண பொதுமக்களே ஒழிய, அமைச்சர் சுப்பிரமணியம் ஒருவர் மட்டுமேயல்ல.

'சுதந்திரம் காக்கப்படவேண்டும்' என்று கூறுவதற்கு கிருஷ்ணமேனனுக்கு மட்டும் அல்ல, கடைசிக் குடிமகனுக்குக்கூட உரிமையுண்டு; இந்திய மண்ணில் **'கருவாகி'**யிருக்கின்ற எல்லா சின்னஞ்சிறிய உயிருக்கும்கூட உரிமையுண்டு.

இங்கிலையில், டிசம்பரில் ஏற்பட்ட ஐயத்தை ஏப்ரலில் மறைத்து, பெரிய பெரிய தனியார் முதலீடுகளுக்கு இந்தியாவில் வழி திறந்து கொண்டுவிட்ட அமெரிக்க ஏகாதிபத்தியத்தை, அதன் அளவுக்கதிகமான உதவியை **'எச்சரிக்கை'** என்ற அளவில் எடுத்துக்காட்ட அறிவாளர்களுக்கு உரிமை இல்லாமல் எப்படிப் போகும்?

அமெரிக்கா சென்ற அசோக்மேதா, அமெரிக்கப் பத்திரிகை நிருபர்களைக் கூட்டிவைத்துப் பேசுகையில், உள் ரகசியம் வெளிப்பட்டு, நிருபர்கள் கேட்ட வினவுக்கு "நாணய மதிப்புக் குறைப்புப்பற்றிப் பேச்சே கிடையாது"—என்று கூறினர்.

அடுத்த இருகிழமைகளுக்குள், இந்திய மக்கள் அவையில் 'நாணய மதிப்புக் குறைக்கப்படமாட்டாது' என்று வாக்குறுதி தரப்பட்டது.

ஒரு திங்கள்கூட முழுமைபெறவில்லை. இரவோடு இரவாக நாணயம் சட்டரீதியான மதிப்பை இழந்த செய்தியை ஏந்தி இந்தியப் பத்திரிகைகள் வெளிவந்தன.

அமெரிக்கத் தலையீடு அல்ல என்று அளிக்கப்பட்ட மறுப்பு — நாளாக நாளாக அதுவும் அப்படி யோசனை கூறியது—என்று மாறி-அதன் கண்டிப்பும், அப்படி மாற்றினல்தான், மேற்கொண்டு 'உதவி'—என்ற உத்திரவும் கைவரப்பெற்ற பின்னர், நாணயம் சுருக்கப்பட்டது, என்று தெரிந்தது.

> பொருளைப் பச்சையாகப் புரிந்து கொள்ள வேண்டுமானல், **இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அத்தனைப் பேருடைய உரிமையும், அமெரிக்காவுக்கு விட்டுக்கொடுக்கப்பட்டது-சுதந்திரம் தானம் வழங்கப்பட்டது-என்பதுதானே பொருள்?**

குறைகளைச் சுட்டிக் காட்டிய போதெல்லாம், இதேபோல ஆத்திர வார்த்தைகளை உமிழ்ந்து கொண்டிருந்துவிட்டு, **தாமே எல்லாம்** என்ற ஆணவத்தில் அமர்ந்திருந்துவிட்டு, இந்தியப் பொருளாதாரத்திற்கு "அறுவைச் சிகிச்சை" செய்கிற அளவுக்குப் பொருளாதாரத்தைப் புரையோட விட்டுவிட்டு—

பஞ்சத்தாலும் பற்றுக்குறையாலும் மக்களை அல்லாடச் செய்தும், விலைவாசி உயர்வால் **ஒருவேளை சோறு கூட போதிய அளவு** புசிக்க முடியாத நிலையில்—

நிறைய சாப்பிடாதே!

நிறைய தேநீர் பருகாதே!

காபியைக் குறைத்துக்கொள்!

தேவையைக் குறைத்துக்கொள்!

என்றெல்லாம் அறிவுரை வழங்கியும், இதற்காகத் திரைப்படங்கள் வெளியிட்டும், மக்களை மடைமைக்குள் ஆழ்த்தி விட்டார்கள்.

அன்றைய காங்கிரஸ் அமைச்சர்களின் கண்மூடித்தனமான ஆணவத்தின் பலனைத்தான் இன்றைய மக்கள் அனுபவித்துத் தீரவேண்டியவர்களாக இருக்கிறார்கள் பலதுறையிலும்.

இன்றைய அமைச்சர்களின் இத்தகு ஆணவத்தை அலட்சியம் செய்துவிட்டார்கள் என்றால் நாளைய தலைமுறையினரைப்பற்றிய கற்பனை பயங்கரமானதாக நிச்சயம் இருக்கும்.

அமெரிக்காவுக்கு அடிமைப்பட்டுவிட்டதா? என்ற அமைச்சரின் பேச்சிலே காணப்படும் ஆணவத்தின் **கனம்** அளவுக்கதிகமானது—எதிர்காலத்தை உள்ளடக்கியிருப்பது.

குறுகிய காலத்துக்குள் இது கணக்குத் தீர்க்கப்படவில்லையென்றால், தவறு செய்தவர்கள் அமைச்சர்கள் அல்லர்-பொது மக்கள்—வாக்காளர்களே யாவார்கள் என்பது மட்டும் நிச்சயம்!

❋

வெறியர்க்கு உவமை!

கொந்தளிக்கும் கடல்நீரில் காகி தத்தால்
கப்பலொன்று செய்துபெரும் வணிகம் செய்ய
மந்தமதி படைத்தொருவன் வருதல் உண்டேல்
மக்களெல்லாம் அவனறிவை என்ன என்பார்:
வெந்தணலில் படுத்துறங்க பஞ்சு மெத்தை
விரிப்பவனைக் கண்டவர்கள் என்ன சொல்வார்
செந்தமிழ நாட்டினிலே இந்தி கொண்டு
செங்கோலைச் செலுத்தவரு வார்க்கே ஒக்கும்!

கிடுகிடுக்கும் நிலநடுக்கம்! அவ்வி டத்தில்
கிளைகளுடன் வாழநினைத் தொருவன் வந்து
அடுக்கடுக்காய் மாளிகையைக் கட்டக் கண்டோர்
அவன்செயலை எனவென்று சொல்லிச் செல்வார்?
கடுகடுக்கும் வேங்கையின்மேல் ஏறிச் செல்ல
கண்தெரியா ஒருவன்பிடி வாதம் செய்தால்
படுபாவி அவன்போக்கை என்ன வென்போம்?
பகை இந்தி வடவர்செயல் அதற்கே ஒக்கும்!

மலைபெயர்க்கும் வலியோனை சிறியன் நின்று
மார்தட்டி நான்பார்ப்பேன் ஒருகை என்பான்
நிலையென்ன? கதியென்ன? நினைத்துப் பார்த்தால்
நாக்கொழுப்பு காங்கிரசுக் காரர் ஒக்கும்!
தலையறுந்து வீழ்ந்தபெண் முண்டந் தன்னை
தலைபொருத்திக் காதலித்து மணம் முடிக்க
தலைகீழாய் நின்றுதவம் செய்வான் உண்டேல்
தலைகொழுத்த இந்திவெறி யர்க்கே ஒக்கும்!!

—**தருமா. மணியன்**

நிராசை!

[திருவாரூர் முத்துராமன்]

வெய்யில் என்றாலும், மழையென்றாலும் இரவென்றாலும், பகலென்றாலும் ஒருசாண் வயிறும், அந்த வயிற்றில் பசியும் இருக்கின்ற வரையில், வயிறு நிரம்ப ஊதியம் கிடைக்கிறதோ இல்லையோ, ஏழை உழைத்துக்கொண்டுதானே இருக்க வேண்டும்!

அதைப்போலதான், அந்தப் படக்கம்பெனியில் பணியாற்றிக்கொண்டிருக்கும் எழிலனும், உள்ளப் புழுக்கத்துக்கிடையே, ஏதேதோ பைல்களைப் புரட்டுவதும் மூடுவதும், கணக்குப் புத்தகங்களைத் திறந்து அங்குமிங்கும் பார்ப்பதும், கூட்டுவதும் கழிப்பதுமாக இருந்ததுடன், சட்டென எழுவதும், உடனே உட்காருவதும், பின்னர் மீண்டும் எழுவதும் அங்குமிங்கும் உலாவுவதும், வந்து அமர்வதும் புரட்டுவதும் எழுதுவதுமாகப்படாதபாடு பட்டுக் கொண்டிருந்தான்.

இரண்டொரு தினங்களில் தயாராகப் போகும் 'செட்'டுக்கான வசனங்களை எழுதுவதில் ஈடுபட்டிருந்த பழநி, எழிலனின் இந்த விசித்திரமான நிலையைக் கவனித்தபடி உள்ளூர சிரித்துக்கொண்டிருந்தார்.

எத்தனை நேரத்துக்குத்தான் உள்ளூர சிரித்துக் கொண்டிருக்க முடியும். பழநி, என்ன நினைத்தாரோ என்னவோ, "என்ன மிஸ்டர் புரொடெக்ஷன் டேமேஜர், ஏதாவது கேஷ் டேமேஜா?" என்றார் வாய் விட்டுச் சிரித்தபடி.

"நத்திங் சார்! மெண்டல் டேமேஜ்; ஹார்ட் டேமேஜ்; அதனால அக்கவுண்ட்ஸ் எல்லாமே டேமேஜ்" என்றான் எழிலன்.

'நிர்வாகி' என்ற சிறந்த பொருளைத் தரும் ஆங்கிலச் சொல்லான 'மேனேஜர்'தான் பழநியின் வாய் பட்டு டேமேஜர் ஆகி இருக்கிறது.

பழநியின் பேச்சும் எழுத்தும் நகைச்சுவை மிகுவன. சந்தர்ப்பங்கள் சதி செய்யாமலிருந்தால் பழநியின் செயல்கூட பல சமயங்களில் நகைச்சுவைக்கு இலக்காவனவா இருக்கும்.

சில நாட்களாகவே அறிவு முடங்கிப் போயிருந்த எழிலனை, அவனுடன் மிக நெருங்கிப் பழகும் பழநி, கவனித்துக்கொண்டுதான் வந்தார்.

"மெண்டல்டேமேஜ், ஹார்ட் டேமேஜ், அதனால அக்கவுண்ட்ஸ் டேமேஜ்; ஆகையினால நத்திங்கா?

என்றார் பழநி.

எழிலன் சொன்ன பதிலையே அங்கொன்றும் இங்கொன்றும் வார்த்தைகளைக் கொண்டு கூட்டி, திருப்பியதுதான் இக்கேள்வி!

எழிலன் பதில் சொல்லவில்லை. இதற்கு அவனது 'அறிவு முடக்கம்' காரணமல்ல; ஆத்திரம்தான்! தான் எப்போது எதைச் சொன்னாலும் தன் வார்த்தைகளைக் கொண்டே தன்னை மடக்கும் பழநியின் மீது அப்போது அளவுக்கு மீறிய ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது; எழிலனுக்கு.

விறைத்த ஒரு பார்வையை எடுத்து வீசிவிட்டு, மேஜையிலிருந்த பைல்களையும், கணக்குப் புத்தகத்தையும் மூடி ஒழுங்குபடுத்தினான்.

"மாணிக்கம்! மாணிக்கம்!"—ஆபீஸ் பையனைத் தான் அழைத்தான் எழிலன். அந்த அழைப்பில் எந்த அளவுக்குக் கடுமையும் ஆங்காரமும் கலந்திருந்ததோ, அந்த அளவுக்குச் சற்றும் குறையாமல் சர்வ அலட்சியத்தோடு எதிரில் வந்து நின்றான் மாணிக்கம்.

"ஒரு டீ; ரெண்டு சிகரெட்"

உத்திரவை உதிர்த்தான் எழிலன். மாணிக்கம் போய்விட்டான். பழநி, எழிலனின் அருகில் வந்து அமர்ந்தார். ஏற இறங்கப் பார்த்தார் எழிலனை. வேறு வேளையாக இருந்திருந்தால் எழிலன் சிரித்துவிட்டிருப்பான். அந்தச் சிரிப்பில் சிலிர்த்திருந்த சினமும் சிதைந்துபோயிருக்கும். ஆனால் இப்போது?

"வாட் டேமேஜர், கொஞ்சம்வெளியே போயிட்டு வரலாமா?" என்றார் பழநி.

டீ வந்தது. இருவருமாகக் குடித்தனர். எழிலன் சிகரெட்டைப் பற்ற வைத்தான். 'சரி, புறப்படலாம்' என்று வலுவில் எழிலனின் கைகளைப் பற்றி இழுத்துக்கொண்டு புறப்பட்டார் பழநி.

எழிலனும், பழநியும் நடக்கத் தொடங்கி, ஒருவாறாக சாந்தோம் கடற்கரையில் வந்து அமர்ந்தனர்.

"மிஸ்டர் எழிலன், இன்றைய உங்கள் போக்கு எனக்குப் பிடிபடவே இல்லை; நாலைந்து நாட்களாக நானும் கவனித்துக் கொண்டுதான் வருகிறேன்; இன்றைக்கு கிளைமாக்ஸ்..."

பழநி முடிக்கவில்லை. எழிலன் குறுக்கிட்டான்.

"சார், எனக்கு ஒண்ணுமே புரியலே. நான் என்ன செய்கிறேன்? என்ன பேசுகிறேன்னுகூட சில சமயம் எனக்கே புரியமாட்டேங்குது..." என்றான்.

இப்போது பழநி சிரிக்கவில்லை. பதிலும் சொல்லவில்லை. எழிலனே பேசட்டும் என்று வாளாவிருந்தார்.

"பழநி சார்! எனக்கு ஒருவேளை பைத்தியம், கியித்தியம் பிடிக்கப் போகுதோ? இந்த நிலைமை ஒரு முன்னோட்டமோ?"

—என்று சொல்லிவிட்டு, அவன் உள்ளத்தைப் போலவே அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருந்த கடலலைகளின் பக்கம், பார்வையைத் திருப்பினான்.

அங்கே, இளம் காதலர் இருவர், முழங்கால் வரையில் ஆடைகளைத் தூக்கிக்கொண்டு அலைகளுடன் விளையாடிக்கொண்டிருந்தனர். எழிலனது பார்வை 'அவள்' மீதே குத்திட்டு நின்றது.

சாந்தோம் கடற்கரை, மொத்தத்தில் அமைதியான இடம்தான். அதிக ஆரவாரம் இருக்காது. பொதுவில் நாம் எதனை விரும்பி கடற்கரைக்குச் செல்கிறோமோ, அதுதான் கிடைக்கும்.

அமைதியை நாடிச் சென்றால், அமைதிகிடைக்கும்.

ஆரவாரத்தை எதிர்பார்த்துப் போனால் அதுவே கிடைக்கும்.

அழகுகளைக் கண்டு ஆனந்திக்கப் போனால், அந்த ரசனையும் அங்கே கிடைக்கும்.

யார், யாருக்கு எதெது வேண்டுமோ அவையனைத்தும் அங்கே கிடைக்கும்.

எழிலன் எதனையும் தேடி, அங்கே வரவில்லை. சொல்லப்போனால், ஏன் அங்கே வந்திருக்கிறோம் என்று அவனுக்கே தெரியாது. பழனிதான் அவனை அங்கே அழைத்துவந்தார்.

இடமாற்றம், ஒருகால் இதயத்திற்கு இதமாக இருக்கலாம் என்ற எண்ணத்தில் அழைத்து வந்திருக்கக்கூடும். அது உண்மையாகவும் இருக்கலாம். எழிலனே மனம் திறந்து பேசத் தொடங்கினனே...அந்த வகையில் பழனிக்கு அது வெற்றிதானே!

அலைகளோடு முழங்கால் அளவுக்கு ஆடைகளைத் தூக்கிக்கொண்டு நின்று விளையாடிய அவளையே சில நிமிடங்கள்வரை இமை கொட்டாமல் பார்த்தான் எழிலன். நிமிடங்கள் மாய மாய பெருமூச்சுக்களின் அழுத்தம் அதிகமாகிக் கொண்டுவந்தது அவனுக்கு.

அவனது மனநிலையின் காரணத்தை ஒருவாறு ஊகித்துக்கொள்ள முடிந்தது பழனியால். அந்த நிலையை வளரவிட அவர் விரும்பவில்லை.

"மிஸ்டர் எழிலன்! மனிதனுக்கு வருகின்ற எந்த நோயும் அவனைக் கேட்டுக்கொண்டு வருவதில்லை; அதே போலத்தான் தொல்லைகளும், துயரங்களும்கூட. நீங்கள் இப்போது கொஞ்சம் மனந் திறந்து பேச வேண்டும்"—என்றார்.

எழிலன் பதில் சொல்லவில்லை. பழனியே மீண்டும் பேசினார். "மனதிலுள்ளவைகளை—மனத்தை அழுத்திக்கொண்டிருப்பவற்றை யாரிடமாவது கூறிவிட வேண்டும்; இல்லாவிட்டால், மனச்சுமை, அறிவைக் கூடக் கூனச் செய்துவிடும் எழிலன்!"

எழிலன், அவள்மீது பதிந்த பார்வையை விலக்கிக்கொள்ள முடியாமல், அரும்பாடுபட்டு விலக்கிக் கொண்டு, மீண்டும் ஒரு கனத்த பெருமூச்சை உகுத்து விட்டுத் திரும்ப, பழனியை ஏறிட்டுப் பார்த்தான்.

"சார்! நீங்கள் எதை எதையோ இதுவரையில் பேசிக்கொண்டிருந்தீர்கள்! என்னோடு பேசுவதாக எண்ணிக்கொண்டு! ஆனல் நான்...நான்..." தொடர முடியாமல் தவித்தான் எழிலன்.

"சொல்லுங்கள் எழிலன்!"

"சொல்லிவிடத்தான் முயல்கிறேன்; சொல்லிவிடுவேன்...சொல்கிறேன்..."

எழிலனின் வார்த்தைகள் தடுமாறின. கண்கள் நீரைப் பனித்தன. கலக்கத்தோடேயே திரும்பி, மீண்டும் அவளைப் பார்த்துவிட்டுப் பேசினன்.

"சார்!என்னுடையஇரகசியங்கள்என்று எதையுமே நான், இதுவரையில் தங்களிடம் மறைத்து வந்ததே இல்லை......"

"உண்மை"

"ஆனலும், ஒரே ஒரு உண்மையை நான் மறைத்துவிட்டேன் என்பது உங்களுக்குத் தெரியுமா?......"

பழனி அதிர்ந்துபோனர். தன்னிடம்கூட ஒன்றை மறைத்துப் பேசும் அளவுக்கு எழிலனல் இருக்க முடிந்ததா? அந்தப்படக்கம்பெனிக்குத்தான் அவர்கள் இருவரும் புதியவர்களே தவிர, அதற்குமுன் நான்கைந்து ஆண்டுகளுக்கு மேலாகவே அவர்கள் அத்யந்த நண்பர்களாயிற்றே!

எத்தனையோ இரகசியங்களை, ஒருவர்க்கொருவர் பரிமாறிக்கொண்டிருக்கிருர்களே!

"எழிலன்......"

"ஒரே ஒரு இரகசியம்தான்......அதுவும்......"

"சொல்லுங்கள் எழிலன்"

"மன்னிக்கவேண்டும் சார்!...இந்தக் கம்பெனிக்கு வந்து ஒரு திங்களுக்குப்பின்தான் அது நடந்தது..."

"ஊம்......"

"இப்போது நான் உங்களை ஏமாற்றவில்லை; பொய் சொல்லவில்லை. 'இதுவரையில் நான் யாரையும் காதலித்ததில்லை' என்று கூறி இருக்கிறேன்; 'ஏனென்றல் இதுவரையில் என்னை யாரும் காதலிக்கவில்லை' என்று நீங்களும் பதில்சொல்லி இருக்கிறீர்கள்!

ஆனல், காதலுக்காக என் நெஞ்சம் ஏங்கித் தவித்த நாட்கள் பலவுண்டு என்பதையும் நீங்கள் அறிவீர்கள். பெண்களைக் கவருகிற கலையில், எனக்குப் போதிய பயிற்சி இல்லாதிருக்கலாம். அல்லது பெண்களை வசீகரிப்பதற்குப் போதிய 'அழகு' எனக்கு இல்லாமலும் இருக்கலாம்!

ஜனதா ஆயுர்வேத வைத்தியசாலை
JAVS
உரிமையாளர்
M.அமீர்பாட்சா
மதராஸ் ஸ்டேட் சோல் ஏஜண்ட்
54, சோலைஹால்ரோடு. திண்டுக்கல்.

ஏஜன்சி இல்லாத ஊர்களுக்கு ஏஜன்சி தேவை!

எங்களிடம் கோல்டன் டானிக் [பேட்டன் டானிக்] தசமூலாரிஷ்டம், பிரசாதிக்கசுதா, பாலாமிருதம், சுதாமிருதம், கதலிக்கல்ப்பம், செவனப்பிரகாசம், ரதிரமணன், ஆஸ்த்துமா, க்ஷயம், டி. பி. இவைகளுக்கு சிறந்த லேகியம்

'கருங்குரங்கு ரஸாயனம்'

மற்றும்

'மதுகாசவம்'

முதலிய ஆயுர்வேத மருந்துகளும் கிடைக்கும்.

ஏஜன்சிகளுக்கு நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

நல்ல முடிவு!

"நாட்டிலே பலர் அரசியலைப் பற்றி இன்னும் தெளிவாக உணர்ந்துகொள்ளாமலிருக்கிறார்கள்!

"வேண்டுமானால், 'அரசியலை நாம் விட்டுவிடலாம்'" என்று எண்ணிக்கொண்டிருக்கலாம். ஆனால், அரசியல் நம்மைவிடுவதாயில்லை.

"சனநாயக நாட்டில், எந்தத் தனி மனிதனும் அரசியலிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது என்ற நிலைதான் ஏற்பட்டிருக்கிறது!

"எனவே, நம்மைப் பற்றிக்கொள்ளவிருக்கின்ற-நம்மைக் கப்பிக்கொள்ளவிருக்கின்ற அரசியலை, நாமாகப் பிடித்து இழுத்து அடிமுதல் முடிவரை பார்த்துவிடுவது என்பதுதான் நல்ல முடிவாக இருக்கும்!

"அரசியல்" என்று நான் கூறுவது, அரசியல் கட்சி நடவடிக்கைகளை அல்ல—அரசின் இயல்புகளை அறிந்துகொள்வதைப் பற்றித்தான் கூறுகிறேன்."

—அண்ணா

இதுபற்றிப் பலநாட்கள் நம்முள் வாதித்து இருக்கிறோம். இவ்வகையில் நீங்கள் என்பால் அனுதாபமும் கொண்டிருக்கிறீர்கள்.

எந்த ஒருவருடைய ஆழ்ந்த அனுதாபம் மட்டிலுமே, மற்றொருவருடைய மனநோய்க்கு மருந்தாகி விடுவதில்லை என்பதுதான் உங்களுக்குத்தெரியுமே!

மன்னிக்கவேண்டும் சார்! இந்த விஷயம்பற்றி இவ்வளவு பச்சையாக நான் பேசவேண்டிய கட்டாயத்துக்கு என்னை ஆட்படுத்திவிட்டீர்கள்.

எண்ணங்களின் பரிமாற்றம், கனத்த இதயத்தை மெலியச்செய்யும் என்பது உண்மையே! ஆனால் ஏனோ தெரியவில்லை, இதுபற்றி உங்களிடம் சொல்ல மனம் வராதது மட்டுமல்ல; விரும்பவும் இல்லை நான்!

என்னையும் ஒருத்தி காதலிக்கிறாளே! முதலில் எனக்கே இது நம்பமுடியாததாக இருந்தது. நான் நம்பிய பிறகல்லவா தங்களுக்குத்தெரிவிக்கவேண்டும்...?"

என்கிறபோது பழனி மெள்ளச் சிரித்துக்கொண்டார். எழிலன் எதிரே ஆழ்கடலைத் திரும்பிப் பார்த்தான். அங்கே யாருமில்லை. அவள், அவனோடு போய் விட்டிருந்தாள்.

வெப்பம் நீங்கி, இதம் நீங்கி, இப்போது இலேசாகக் குளிர்காற்றுப்பட்டு உடலை மெள்ள நடுக்கிக் கொண்டிருந்தது.

"எனக்கே நம்பிக்கை இல்லாத ஒன்றுதான் அது: என்னையும் ஒருத்திக்காதலிக்கிறாளே! இதில் நான் எவ்வளவு தூரம் வெற்றியடையப்போகிறேன்? அவள் என்னைக் காதலிக்கிறாளா? அல்லது நான்தான் அவளைக் காதலித்துக்கொண்டிருக்கிறேனா?

இந்தக் கடைசி வினாவிற்கு என்னால் பதில் சொல்ல முடியாது; அன்று மட்டுமல்ல, இன்றுகூட என்னால் முடியவே முடியாது.

எப்படியோ காதலித்தோம்! நெஞ்சிணைந்தோம்!... முதல் அனுபவம்தான் எனக்கு அது. புதிய அனுபவமும்கூட.

எனக்குப் புரியாத பல விஷயங்கள் புரியத் தொடங்கின. அவளது கரங்களைப் பற்றுகிறபோதில் ஒரு இன்பம்; அவள் மடிமீது தலைசாய்த்துக்கிடக்கிற வேளையில் ஒரு இன்பம்.

என் மார்புமீது அவள் புரண்டுகிடப்பாள்! அவள் மீது நான் புரள்வேன்! ஒருவர் மீது ஒருவர் புரள்வோம்!

உண்மையைத்தான் சொல்கிறேன்...பலநாட்கள் பட்டினிகிடந்தவன் முன் பலபடப் படையலிட்டு, பசியாறச் செய்தால் எப்படியோ அப்படித்தான் நான் அவளிடம் நடந்துகொண்டேன்!

அவள் அலுத்துக்கொள்ளவில்லை; சலித்துக் கொள்ளவில்லை.

முடவனாக இருந்த எனக்கு, அவள் கொம்புத்தேனாக இனித்தாள். கிடைத்தற்கரியபேறு கிடைத்துவிட்டதாகவே நான் பூரித்தேன்; புளகாங்கிதமடைந்தேன்! என்னையறியாமலேயே என் முகத்தில் ஒருவித சோபை படர்ந்து வந்தது.

அப்போதுதான் நீங்கள் கேட்டீர்கள், கையில் மிதமிஞ்சிப் பணப்புழக்கம் இருப்பதால், நிரம்பிய நெஞ்சு உடலிலும் முகத்திலும் 'தேஜஸ்' கொடுத்திருக்கிறதா என்று!

வெறும் ஏளனப் புன்னகை ஒன்றைத்தான் அப்போது அந்தக் கேள்விக்கு விடையாகத் தந்தேன் என்பது இன்னும் எனக்குப் பசிய நினைவாக இருக்கிறது. 'உண்மையை ஒப்புக்கொண்டேன்' என்று நீங்கள் நம்பிப்போயிருக்கலாம்.

அந்த 'அவளை' நீங்கள் பலமுறை பார்த்திருக்கிறீர்கள். நம் இருவரையும் இணைத்து 'அவள்' பலமுறை பார்த்திருக்கிறாள்.

அடுத்த வீடுதானே! காலை எழுந்தவுடன் ஒருவர் முகத்தில் ஒருவர் விழித்துக்கொள்வோம்! இடை ஜன்னல் இருவரையும் மிகமிக நெருக்கமாகப் பிணைத்து வந்தது.

"காற்று வெளியிடைக்கண்ணம்மா......" என்று நான் பாடுவேன்;-"உன்றன் காதலை எண்ணிக் களிக்கின்றேன்"—என அவள்பாடுவாள்!

ஒருநாள், காந்தி மண்டபத்திற்குச் சென்று வந்தோம். இன்னொருநாள் இதே கடற்கரையில், அதோ அந்த தோணியின் மறைவில் சாய்ந்துகிடந்தோம்! வேறொரு நாள், மாமல்லபுரம் கடற்கரையில் களித்துக்கிடந்தோம்! மற்றோர் நாள் மாலை, சைனாபஜாரில் அப்படியும் இப்படியுமாக நடந்து நடந்து பொழுதைக் கழித்தோம். படம் பார்க்கச் சென்று பரவசமடைந்த நாட்கள் பலப்பல.

எண்ணத்தால், எழுச்சியால், சிந்தனையால், செயலால் அனைத்தாலுமே நான் மாறுபாடு அடைந்து கொண்டிருந்தேன். அப்போதுதான் அந்தப் பேரிடி என் தலையில் விழுந்தது.

இத்தனை ஆண்டுக் காலமாக, எந்த ஒன்றுக்காக நான் ஏங்கி ஏங்கி இளைத்தேனோ, அது எனக்கு எதிர்

தேவைதானா, தாயே!

நான் தாய்மார்களைக் கேட்டுக்கொள்கிறேன் -- 'அங்கே குத்துவெட்டு! இங்கே அடிதடி சண்டை! அங்கே கலகம்! இங்கே குழப்பம்! என்ற இந்தச் சில்லறை விஷயங்கள் உங்களுக்குத் தேவைதானா? அன்றாட வாழ்க்கையில் நீங்கள் காட்டும் அக்கறை-அடக்கம்-உங்கள் ஒழுக்கத்தைக் காத்துக்கொள்ளும் அழகு-விலைகள் இருக்கும் நிலையில் செட்டாக நீங்கள் குடும்பம் நடத்தும் பாங்கு-இவைதான் உங்களுக்குத் தேவையே தவிர, கொலை நிகழ்ச்சியின் காரணம் என்ன? கெட்டுப்போவதற்கான வாய்ப்புகள் என்ன என்ற விளக்கங்களை நீங்கள் படிக்கத்தான் வேண்டுமா?

—எம். ஜி. ஆர்.

பாராமல் கிடைத்து, மின்னல் எனத் தோன்றி கண்ணைப் பறித்துவிட்டது!

வழக்கம்போல், அன்றிரவு ஜன்னல் வழியாக கையில் 'இச்' கொடுத்துச் சென்ற அவளை, தொடர்ந்து பத்துப் பதினைந்து நாட்கள் வரையில் பார்க்க இயலவில்லை;

துடிதுடித்துப் போனேன்! துவண்டுவிட்டேன்! பறிகொடுக்கக்கூடாத ஏதோ ஒன்றை நான் இழந்துவிட்டேன்! என் தலையே சுழன்றது! சிந்தனை செயலற்றது; மொத்தத்தில் 'முட'மாகிப்போனேன்!

"உடம்புக்கென்ன எழிலன்?.........டாக்டரையாவது பார்ப்பதுதானே!"–என்றுதான் உங்களால் அப்போது கேட்க முடிந்தது.

எனக்கு அப்போது ஏற்பட்ட நோயை மருந்துகளால் தீர்க்கக்கூடிய மருத்துவர்கள் இருக்கிறார்களா என்ன?

மீண்டும் ஒரு மின்னல்! ஒருநாள் காலை அவளைக் கண்டேன். என்னைப்போலவே அவளும் துரும்பாகி இருந்தாள். வெளிறிப்போய் இருந்தாள். கவலை ரேகைகள் கால்கோலி இருந்தன.

நான் சிரிக்க முயன்றேன்; அவளும் முயன்றாள். மறுநாளும் கண்டேன். அவளும் கண்டாள். இப்போது இருவருமே சிரிக்கவில்லை. ஜன்னலைப் பார்க்கும்படி 'சைகை' செய்தாள்.

அங்கே—

என்னைத் தீண்டித் தீய்ப்பதற்குரிய 'கருநாகம்' அங்கேதான் இருந்தது. 'என்னையும் ஒருத்தி காதலிக்கிறாளா? நிச்சயம் நிகழ முடிந்த ஒன்றா இது?' என்ற என் உள்ளத்து உணர்வுக்குச் சரியான 'தீனி' அங்கேதான் இருந்தது.

அன்பரே!

"இனி என்னைப் பார்த்துச் சிரிக்க முயலாதீர்கள்; என்னைப்பற்றி நினைக்கவே முயலாதீர்கள். நான் உங்களை வெறுக்கவில்லை; ஆனால் உங்களோடு இணைந்திருக்க முடியாதவளாக ஆகி இருக்கிறேன்; விளக்கம் கேட்காதீர்கள். விளைவு, விபரீதமாயிருக்கும்! மன்னித்துவிடுங்கள்! நடந்தவை அனைத்தையும் நான் மறக்கவே முயற்சிக்கிறேன்."

— லெட்சுமி.

நஞ்சு நல்லபடி ஏறிவிட்டது. கடிதத்தை திரும்பத் திரும்பப் படித்தேன்! எத்தனை முறை படித்தேனோ, உணர்வு இழந்துபோகும் வரையில் படித்திருக்க வேண்டும்! உணர்வு திரும்பிய பின், அந்த வீட்டில்–அவள் வீட்டில் அவளைப் பார்க்கவே முடியவில்லை!

இந்தச் சமயம் பழநி, எழிலனை மெள்ள ஏறிட்டுப் பார்த்தார். நன்கு படர்ந்துவிட்டிருந்த இருளில், அவரது கண்களில் பனித்திருந்த நீர்த்துளிகள், புலனாகாமல் போயிற்று.

"தேங்கா, மாங்கா, பட்டாணி சுண்டல்"களின் குரல்களும் மெள்ள மெள்ள ஒடுங்கிக் கொண்டு வந்தன.

"எழிலன், உங்களைத் தேற்றுவதற்கு எனக்கு வழியே தெரியவில்லை, மன்னியுங்கள்" என்றார் கரகரத்த குரலில் பழநி.

"தேற்ற வேண்டிய கட்டம் இன்னும் வந்துவிடவில்லை சார்! கேளுங்கள்"

—என்று எழிலனே தொடர்ந்தான்.

"சார்! உடல் நலமில்லை என ஒரு வாரம் படுத்திருந்தேனே, அப்போதுதான் இது நடந்தது.

படுக்கையிலிருந்து எழுந்தேன்; என் அப்போதைய நிலையைத் துல்லியமாகப் புரிந்து கொண்டவன் ஒரே ஒருவன்தான்!..."

"மாணிக்கமா?"—என்று இடை மறித்தார் பழநி.

"அவன் நன்றி கெட்டவன் சார்! அவனல்ல, பன்னீரைத்தான் உங்களுக்குத் தெரியுமே, அவன்தான் என்னைப் புரிந்துகொண்டான். அப்போதைக்கு எனக்கு என்ன 'மருந்து' தேவை என்பதை நன்கு கண்டுகொண்டிருந்தான்.

மிக மிகக் கட்டாயப்படுத்தி, என்னை, அங்கே அழைத்துப் போனான் பன்னீர்.

மறுத்தேன்; விடவில்லை. மிகவும்வலியுறுத்தினான்' 'சினிமாக்காரர்களுக்கு இதெல்லாம் சாதாரணம்' என்றான். என் உள் மனமும் இதமான எதையாவது வேண்டித்தான் நின்றது!

அவ்வளவுதான்!

இரவு 10 மணி இருக்கும். பன்னீர் அழைத்துச் சென்ற 'அந்த வீட்டுக்குள்' நுழைந்து அறைக்கதவை மெள்ள மூடிவிட்டு, அங்கே கிடந்த கட்டிலில் அமர்ந்து சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டேன்.

சிகரெட்டிலிருந்து கிளம்பிய புகையைப் போலவே என் இதயத்துக் குள்ளேயும் ஏதோ புகைந்துகொண்டிருந்தது. 'ஏற்படப் போகிற ஒரு தவறு, என் வாழ்க்கை ஏட்டிலேயே அழிக்க முடியாத கறையை அப்பிச் செல்லப் போகிறது' என்று எண்ணமிடத் தொடங்கினேன்.

சில நிமிடங்கள் கழிந்திருக்கும்; அறைக் கதவு திறக்கப்பட்டு, மீண்டும் தாழிடப்பட்டது எனக்குத்

தெரியும்! பின்னர், பெண்களுக்கேயுரிய நாணம் என்னைப் பற்றிக்கொண்டது!

'கலகல வென வளை ஒலித்தது; கம்மென்று மல்லிகை மணம் அறையெங்கும் பரவியது.

எனக்குப் பின்புறத்திலிருந்து அவள் வந்து கொண்டிருந்தாள். என் நாணத்தை அவள் புரிந்து கொண்டாளோ என்னவோ, சட்டென்று மின் விளக்கை அணைத்துவிட்டு வந்து என் கட்டிலில் என்னை மிக நெருங்கி அமர்ந்தாள்.

அவளே என் கரங்களைப் பற்றினுள்; என் தாடையைத் தூக்கி நிமிர்த்தினுள். எல்லாம் இருளில்!

அவள் முகம் எனக்குத் தெரியவில்லை.

"நீ...நீ..." என்றேன் நான்.

"நான், நான்" அவள் கேலி செய்தாள்.

ஒரு சலனம். அந்த நிலையில் எனக்கு என்ன செய்வது, என்ன பேசுவது என்றே புரியவில்லை.

"கொஞ்சம் லைட்டைப் போடேன்......"

வியர்த்து, விறு விறுத்துத்தான் சொல்லி இருக்கிறேன் நான்.

"நீங்கள்......"

அவளுக்கே ஒரு அதிர்ச்சி!

என் குரல் அவளுக்கு என்னைக் காட்டிக் கொடுத்துவிட்டது!

அவள் கரங்களைப் பற்றினேன். வெட வெட வென்று அவள் நடுங்கிக் கொண்டிருந்தாள். அவள் ஏன் அப்படி நடுங்க வேண்டும்? யார் அவள்?

அந்த இருளுக்கிடையே அவளே, என்னை இறுக அணைத்துக்கொண்டாள்! விடுபட விரும்பாமல் கேட்டேன் 'நீ......' என்று.

"லெட்சுமி..."

வானம் இடிந்தது; நிலம் பிளந்தது...கடல் கொந்தளித்தது. நான் எங்கோ அதளபாதாளத்தில் விழுந்து இறந்து கொண்டிருந்தேன்.

சட்டெனக் குனிந்து, என் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, அதனைக் கண்ணீரால் கழுவத் தொடங்கினுள்.

அவளது கடிதத்திலுள்ள,

"உங்களோடு இணைந்திருக்க முடியாதவளாகி இருக்கிறேன்; விளக்கம் கேட்காதீர்கள்"

—என்ற சொற்கள் ஏதோ ஒரு ஆழ்கிணற்றுக்குள்ளிருந்து என் தெளிவற்ற மூளையில், ஒரு தெளிவை ஏற்படுத்த முயன்றன.

பழநி குறுக்கிட்டார்; "உங்களையும் அப்படிப் பட்ட ஒரு இடத்தில் அவள் பார்த்திருக்கக் கூடாதல்லவா!"

எழிலன் பேசவில்லை. எழுந்தான். மௌனமாகப் பழநியைத் தொடர்ந்தான். ❀

தமிழ் நாட்டில் தனிச் சிறப்புடன் விளங்குவது

ஜெயா பார்மஸி H.O. பெரியகுளம்

சர்க்காரால் அங்கீகாரம் செய்யப்பட்டது.

(Recognised by Central Board of Indigenous Madicine Madras)

பொதுமக்கள் ஏமாற்றமடையாதிருக்க, எங்களது மருந்துகளை வாங்கும்போது, ஜெயா பார்மஸி H. O. பெரியகுளம் என் பதையும் லேபிளில் உள்ள முத்திரையையும் கவனித்து வாங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

JEYA

பிராஞ்சுகள்:

51, Dr. நடேசன் ரோடு, சென்னை-5.
51, செஞ்சி ரோடு, திண்டிவனம்.
17, நெல்கடைத் தெரு, மாயவரம்.
2 வள்ளிமால் தெரு (சிங்காரத்தோப்பு எதிர்) பெரியகடைவீதி, திருச்சி-8.
28 நெத்திமேடு, கே [illegible] ரோடு, சேலம்'-2
208 ஒப்பணக்காரத்தெரு கோயம்புத்தூர்
63, மார்க்கட் ரோடு, தஞ்சாவூர்.
47A கன்னம்மாள்கோயில்தெரு திருநெல்வேலி ஜங்.
மற்றும் தமிழகமெங்கும் ஏஜண்டுகள்.

புதிதாக ஏஜன்ஸி வேண்டுவோர், தலைமை நிலையத்திற்கோ, பிராஞ்சிற்கோ விண்ணப்பிக்கவும்.

உரிமையாளர்: **J. M. ராஜன்**, ஜெயா பார்மஸி, மதுரைரோடு திண்டுக்கல்.
போன்: 348, 348-A, 438.

கொலையாளிகள்!

உலக நாடுகளிலே முக்கியத் தலைவர்கள் திடீரென்று கொலை செய்யப்படுவதும், அந்தக் கொலைகாரன் யார் என்பது கேள்விக் குறியாகி விடுவதும், இன்றைய சாதாரண நிகழ்ச்சிகளாகி விட்டன. ஆனால் நாட்டின் தலைவர்களைக் கொலை செய்வதற்கென்றே இப்படிப்பட்ட கொலைகாரர்கள் 25ஆயிரம் பேர் கிளம்பியிருக்கிறார்கள் என்பதை அறியும்போது நெஞ்சம் திடுக்கிடுகிறது! வேதனை மேலிடுகிறது! அந்த கொலைகாரக் கும்பலைப்பற்றிய கட்டுரை இது! படித்துப் பாருங்கள்—கண்கள் கலங்கும்!

கொலை! மனித சமுதாயத்தில் நாகரிகம் பெற்ற மனிதன் செய்யக் கூடாத கொடிய குற்றம். ஆனால் இந்தக் கொடிய குற்றத்தை, கைக்கூலி பெற்றுச் செய்வதற்கு என்ற உலகில் ஒரு கூட்டம் கிளம்பியிருக்கிறது. அண்மையில் பாரீஸ் நகரத்தில் பட்டப் பகலில் மொராக்கோ நாட்டைச் சேர்ந்த முற்போக்குத் தலைவர் மெஹ்த பென்பெர்க்கா கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். இது அரசியல் சதி என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கொலைக்கு-சதித் திட்டத்திற்கு செலவழிக்கப்பட்ட தொகை 72 ஆயிரம் பவுன்!

கினியா என்ற ஆப்பிரிக்க நாட்டின் குடிஅரசுத் தலைவர் செக்கு துரேயைக் கொலை செய்ய முயன்ற ஒரு கும்பலை கினியா போலீசார் கைது செய்தனர். இந்த சதிக் கும்பலைச் சேர்ந்த பலர் இன்னும் வெளி நாடுகளில் இருக்கின்றனர்.

இதே சமயத்தில் கானா என்ற ஆப்பிரிக்க நாட்டில் இன்னொரு சதிக் கும்பல் தலைவன் நுழைந்தான். இவன் மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்தவன். பெயர் லுட்ஸ் ஹெரால்டு! இவன் பாஸ் போர்ட் வாங்காமல் டோகோ வழியாக எல்லை கடந்து கானாவிற்குள் நுழையும்போது கைது செய்யப்பட்டான். இவனுக்கு இடப்பட்ட கட்டளை, கானாவில் கலகமூட்டுவது. அதற்கான ஆதாரத்தோடு அகப்பட்டுக்கொண்டான்.

இப்படி உலகத் தலைவர்களைக் கொலை செய்வதற்கென்றே 25 ஆயிரம் கொலைகாரர்கள் உலகம் முழுவதும் அலைந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களில் பலர் மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த நாஜிகள். இட்லரின் சீடகோடிகள். சதிகள், கொலைகள், அரசாங்கங்களைக் கவிழ்ப்பது ஆகியவைகளில் இவர்கள். கைதேர்ந்த ஆசாமிகள் உலகக் கொலைகாரர்களைப் பற்றிய இந்த விவரங்களை அமெரிக்காவிலிருந்து வெளி வரும் 'யு. எஸ். நியூஸ் அண்டு வேர்ல்டு ரிபோர்ட்' என்ற பத்திரிகை விரிவாக வெளியிட்டிருக்கிறது.

1960-ம் ஆண்டு காமரூன் மக்கள் தலைவர் பீலிகஸ்மவுமி ஜெனிவாவிலுள்ள கில்வர் பிளேட்என்ற சிற்றுண்டிச் சாலையில் விஷமூட்டிக்கொல்லப்பட்டார். இதற்கு முன்பு அவர் லண்டனிலிருந்த போது அவரைச் சுட்டுக் கொல்ல பலர் முயன்றார்கள். ஆனால் அப்போது அவர் தப்பிவிட்டார். ஜெனிவாவில் இவருக்கு விஷமூட்டியவன் ஒரு பிரெஞ்சுகாரன். பெயர் வில்லியம் பச்டெலி.

1961-ம் ஆண்டு ரொடீசியா நியாசாலாந்து சமஷ்டியில் பல சாலை விபத்துகள் ஒன்றுபின் ஒன்றாக நடந்தன. ஆப்பிரிக்க மக்கள் சங்கத் தலைவர் டாக்டர் பரிநெணியத்தா மர்மமான சூழ்நிலையில் மரண காயமுற்றார்.

செப்டம்பர் 3-ம் தேதி நியாசாலாந்து (மாலாவி) அரசியல் தலைவர் டண்டுசோசிசிசா இறந்து கிடந்தார்.

நவம்பர் மாதம் வடரொடீசியா (ஜாம்பியா) ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் லாரன்ஸ் காடிலுங்கு கொல்லப்பட்டார்.

டிசம்பர் 2-ம் தேதி ஐ. நா. சபைக்குச் சென்று திரும்பிய பிரபல அரசியல் தலைவர் பால் முஷாங் செத்துக் கிடந்தார்.

அங்கோலா என்ற ஆப்பிரிக்க நாடு சுதந்திரத்திற்காகப்போராடிக் கொண்டு இருக்கிறது. புரட்சிப் படையின் தலைவர் ஜோவோபாப்டிஸ்டா பவ்ரா கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.

1964-ம் ஆண்டு ஜூன் 2-ம் தேதி பசுந்தோலாந்து என்ற நாட்டின் புரட்சித் தலைவர் ஜான் மாட்லோகிலோ முதுகில் சுடப்பட்டார். சுட்டவன் போலீஸ் உதவியுடன் தப்பிவிட்டான்.

ஜூன் 16-ம் தேதி பசுந்தோலாந்து தொழிற் சங்கத் தலைவர் நப்போ மெபேன் கத்தியால் குத்தப்பட்டார். குத்தியவன் தப்பி விட்டான்.

1965-ம் ஆண்டு ஜனவரி 15ம் தேதி புருண்டி பிரதமர் பீரி எண்கண்ட்வேயை அமெரிக்கத் தூதரக ஆசாமி தாக்கினான். பிரதமர் படுகாயமடைந்தார். தாக்கியகொலைகாரனின் பெயர் கன்சால்வே எம்ஜூயன்சி. இவன் பிரதமர் பீரியைக் கொலை செய்வதற்காக வாங்கிய பணம் 30லட்சம் புருண்டிபிராங்குகள்!

அரசியல் கொலையாளிகளிலும், அரசாங்கங்களைக் கவிழ்ப்பதிலும் கைதேர்ந்தவர்கள் மேற்கு ஜெர்மனி கூலிப்படையினர். காங்கோவில் லுமும்பாவின் தலைமையில் அமைந்த அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கும் லுமும்பாவைக் கொலை செய்வதற்கும் ஷோம்பே வெளி நாடுகளிலிருந்து கொலைகாரர்களையும், கூலிப்படைகளையும் இறக்கினான்.

இவர்களில் பெரும்பாலோர் மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்தவர்கள். இட்லரின் நாஜிப்படையில் இருந்தவர்கள். லுமும்பா கொலை செய்யப்பட்டதில் இவர்களுக்குப் பெரும் பங்குண்டு என்பது கண்டு பிடிக்கப்பட்டது.

பல மேற்கு ஜெர்மனி கொலையாளிகள் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு மேற்கு ஜெர்மனி அரசாங்கமே பாஸ்போர்ட் வழங்கியிருக்கிறது. ஒரு நாட்டில் எத்தகைய அரசாங்கம் அமையவேண்டும் என்பதைத் தீர்மானித்துக்கொள்ள வேண்டியது அந்நாட்டு மக்கள். தங்களுக்குப் பிடிக்காத ஒருவர் தங்களது சுரண்டலுக்கு வழிவிடாத ஒருவர் ஆட்சி பீடத்திற்கு வருகிறார் என்பதற்காக, அவரையே கொலை செய்வதென்பது அரசியல் கொடிய அநீதி மட்டுமல்ல; உலகம் மன்னிக்க முடியாத பெரும் கொடிய குற்றமாகும்.

(நன்றி: **தமிழ் மலர்**)

பூவையர் மூவர்!

இந்தக் காலத்தைப்போல, அந்தக் காலத்தில் கல்லூரிக் கன்னியர்களைக் காணும் பேறு, திருவள்ளுவப் பெருந்தகைக்குக் கிடைத்திருக்குமானால், எனக்கு இக்கட்டுரை எழுதக் 'கரு' கிடைக்காமற் போயிருக்கும்!

ஏனென்றால், 'காதல்' என்ற நாதத்தையோ, 'கணவன்' என்ற உயிர்த் துணையையோ, 'பிரச்னை'ப் பொருளாக்கிப் பேசுந் துணிவோ, தனித் திறனோ, அந்தக் காலத்துப் பெண்களுக்கு இருக்கவில்லையே!

காதலைக் காதலாகவும், கணவனைக் கணவனாகவும் கருதி வாழ்ந்த காலத்து வள்ளுவரை, நினைக்க நினைக்க...வீசிய தென்றற் காற்று என்னை அணைக்க, அணைக்க...பூஞ்சோலைக்குள்ளே அப்போதே மலர்ந்து புதிய பலதரப்பட்ட மலர்களிலிருந்து பரவிய நறுநாற்றத்தால் பிறந்த ஒருவித மயக்கத்தில் நான் ஆழ, ஆழ...

என்னை மறந்தேன். முன்னிரவிலேயே உறங்கிப்போனேன், சோலையிலேயே படுத்து!

O

பொங்கலுக்கே எப்படியாவது மூவரும் சேர்ந்து விடவேண்டும்; நீண்ட நெடும் பிரிவுக் காலத்தே நிகழ்ந்த சுவைமிக்க நிகழ்வுகளைப் பற்றிப் பேசவேண்டும்; பேசிப் பேசி நாள் பூராவும் கழிக்கவேண்டும்; நிலாச் சோறு சமைத்து, நிலவொளியில் அமர்ந்து, நிலவுக்குத் தந்து, பேச்சுக்கிடையே, உதிரும் நகைப்புக்கிடையே ஒருவர் கைப் பருக்கையை, மற்றவர் பறித்து உண்டு மகிழவேண்டும் என்றெல்லாம் முன்கூட்டியே திட்டமிடப் பட்டதுதான்!

திட்டம்தீட்டியபோதே, அதற்கு மாற்றுத் திட்டமும் தயாராய் வைத்திருந்தார்கள், பொங்கலுக்கு சந்திக்க முடியவில்லையென்றால், 'காணும் பொங்கலு'க்காவது என்று. அதுவும் தவறினால், பொங்கல் கழித்து அடுத்த நிலா நாளில், எப்படியும் சந்தித்தே விடுவது—என்பது திட்டவட்ட முடிவு!

பூங்கொடி, பூஞ்சோலை, பூங்குழலி — இவர்கள் மூவரும் சிறிய வயதிலிருந்தே நட்புடையவர்கள். ஒரே தெரு. அதனால் ஒன்றிய உள்ளம்! ஒன்றிய உள்ளம் காரணமாக நெருங்கிய நட்பு!

என்ன செய்வது? பருவம் என்ற பாவி செய்த படுபாதகம் காரணமாக உள்ளம் ஒன்றிய மூவரும், ஒவ்வோர் ஊருக்குப் பிரித்தனுப்பி வைக்கப்பட்டனர், மணவினை முடிக்கப் பெற்று!

ஒவ்வொருவரும் பிரிய முடியாமல் பிரிந்தனர். கண்ணீருக்கிடையே காலம் அவர்களைப் பிரித்துவிட்டது.

O

பிரிந்தவர்கள், தாம் எப்படியும் கூடிவிட வேண்டும்; கூடி எண்ணங்களை, எழுச்சிகளை இதயப் பரிமாற்றம் செய்துகொள்ள வேண்டும் என்று 'ஓலையனுப்பி' உறுதி செய்து திட்டமிட்டுக் கொண்டார்கள்.

முழுநிலா. திட்டமிட்டபடி பூவையர் மூவரும் ஊரின் மையமாய் அமைந்த சோலைக்குள் வந்து அமர்ந்தனர்.

'ஒருவரையொருவர் அணைத்து, ஆரத்தழுவி முத்தமாரிகள் பொழிந்து, கரத்தோடு கரம் சேர்த்து, மார்போடு மார்பிணைத்து, கண்ணீர்விட்டு' என்ற சம்பிரதாயங்கள் எல்லாம் அன்றுக் காலையிலே முற்றுப் பெற்றுவிட்டிருந்தன. எஞ்சி இருந்தவை, இதயங்களைப் பரிமாற்றம் செய்துகொள்ள வேண்டியவையே. இதயத்து பாரங்களை இறக்கிவைக்கவும், ஒருவர் மற்றவரது பாரத்தைச் சுமக்கவும் வேண்டியவைகளே.

பூவையர் தம் கரங்களைவிட்டு அவர்கள் தயாராய்க் கொண்டுவந்திருந்த 'நிலாச்சோறு' மூட்டைகள் கீழிறங்கின.

விழுங்கிவிடும் கண்களோடு ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு மூட்டைகளை அவிழ்த்தனர். அவிழ்த்துக்கொண்டே பூங்கொடி என்பாள்—

"என்னடி பூஞ்சோலை! சின்ன வயதில் கண்குழி நிரம்ப அஞ்சனம் அப்புவாய். இப்போது கோல் கொண்டுஎழுவதுகூட இல்லையோ" என்று பேச்சைத் தொடங்கினாள்.

பேச்சின் தொடக்கம், தங்கள் தங்கள் இதயத்துப் பாரங்களை இறக்கிவைக்கும் நிலையை மாற்றிப் புதிய திசையில் திருப்பிவிட்டது.

நீயா, நானா என்ற பலப் பரிட்சையைத் தொடக்கி வைத்தது!

"பூங்கொடி! நீ எப்படி இருக்கிறாய் என்று எனக்குத் தெரியாது; எனக்கு இப்போது தெரிவதெல்லாம் என் காதல் மணாளனது உருவம், எங்கெங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறது என்பதுதான்! அதனால்தான் என்னால் கண்களில் கூட அஞ்சனம் தீட்ட முடியவில்லை. கண்ணுள்ளே காணும் அவரது உருவம், எழுதும் நேரத்தில் — இமை மூடப்படும்போது— காணாது போய்விடுமே, அதனை என்னால் பொறுக்க முடியாது; ஆகவேதான் கண் எழுதுவதையே நிறுத்திவிட்டேன்"-என்றாள் பூஞ்சோலை.

பூங்குழலி இதைக் கேட்டுப் பலமாகச் சிரித்தாள். பூங்கொடியைப் பார்த்து-

"போடி போ! பைத்தியக்காரி! இமைத்தால் மறைந்து போவாராம் கணவர்! என் காதலர் எப்படிப் பட்டவர் தெரியுமா! மிகமிக நுண்மையானவர்! கண்ணுக்குள்ளே காணாமலும் போகமாட்டார்! இமைத்தால் அதற்காக வருந்தி மறைந்து போகவும்மாட்டார்! எந்த நிலையிலும் தோற்றம் தெரிந்துகொண்டே இருக்கும் மிக நுண்ணியர்!"-என்றாள் பெருமையாக!

அதற்குள் பூஞ்சோலை மூட்டையை அவிழ்த்து சில கவளங்களை உள்ளே அனுப்பிவிட்டு, நீர்ப்பருகப் பொற்சிரகத்தை எடுத்தாள். அவளைத்தொடர்ந்து பூங்கொடியும் தயாராகப் பிரித்து வைத்துக்கொண்டு, ஒரு கவளத்தைக் கையிலேந்தி, ஏக்கம் நிறைந்த விழிகளோடு, அதனையே உற்றுப் பார்த்

(12-ம் பக்கம் பார்க்க)

விற்பனையாளர்களுக்கு

"காஞ்சி" விற்பனையாளர்கள் அனைவருக்கும் ஜூன் மாத பில் அனுப்பப்பட்டுள்ளது. பட்டியல் தொகை தவறாமல்அனுப்பவேண்டுவதுடன், பாக்கியுள்ள விற்பனையாளர்கள், தங்கள் பாக்கியையும் சேர்த்து .அனுப்பக் கோருகிறோம். மிகுந்த பாக்கியுள்ளவர்களுக்கு நிச்சயம் இதழ்கள் நிறுத்தப்படும் என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

உரிமையாளர்
"காஞ்சி"

உலக அரங்கில்:

சலாசர் சிரிக்கிறார்!

போர்ச்சுகலின் சர்வாதிகாரி சலாசர் இன்னும் சிரித்துக் கொண்டுதான் இருக்கிறார். ஆனால் அவரது ஏகாதிபத்தியத்துக்கு ஆளாகியுள்ள அங்கோலாவின் மக்களோ இன்னும் போராடியபடிதான் இருக்கிறார்கள்.

வெற்றி அல்லது வீர மரணம் (Vitoria-O-Morte) என்ற விடுதலைக்காகப் போராடுபவர்களின் குரல் அங்கோலா எங்கணும் ஒலித்துக்கொண்டுள்ளபடியே இருக்கிறது. ஆனாலும் இருண்டகண்டத்தை நினைவுபடுத்திக் கொண்டிருக்கும் போர்ச்சுகலின் சலாசரும் தென் ஆப்பிரிக்காவின் வெர்வோர்டும் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தபடியேதான் இருக்கிறார்கள்.

என்றோ போட்ட இராணுவ உடுப்புகளை இன்னும் கழட்டியபாடில்லை; நண்பர்களும் நண்பர்களும், தாயும் தந்தையும், தந்தையும் தனயனும் இன்னும் ஒருவரையொருவர் சந்தித்துக்கொண்டபாடில்லை. எல்லோரும் நாட்டு விடுதலைக்காகக் காடுகளிலும் மலைகளிலும் பலகாலமாகப் பதுங்கிவாழ்ந்து சலாசரது ஆட்சியை எதிர்த்துப் போர்புரிந்து வருகிறார்கள். உழவர்கள் மட்டுமல்ல; சுரங்கத் தொழிலாளிகள், ஏனைய அலுவல்கள் புரிவோர் அத்துணைப்பேரும்பக்கபலம், சுதந்திரப் போராட்டத்துக்கு. இத்துணைக்கும் பின்னால் நாட்டின் நல்லறிவாளர்கள் அனைவரும் உடனிருந்து ஊக்கம் தருகின்றனர்.

ஆண்டுகள் பலவாக நடக்கும் இந்த விடுதலை இயக்கத்தை அரசியல் துறையில் மட்டும் அடக்கி ஒடுக்கி வைத்திருக்கவில்லை போர்ச்சுகலின் சர்வாதிகாரி சலாசர். ஆட்சி மட்டும் மாறினால் போதாது; சமுதாய அமைப்பு முறையே மாறவேண்டும் என்ற அளவுக்கு அந்நிய நிறுவனங்களுக்கு மேற்கத்திய நாடுகளுக்கு அங்கோலாவை 'குத்தகைக்'கே விட்டுவைத்திருக்கிறார் சலாசர். தனது அரசியல் சர்வாதிகாரம் நீடிக்கவேண்டும் என்பதற்காக மேற்கு ஜெர்மனி, அமெரிக்கா போன்ற நாடுகளிடமும், மார்கன், யூனியன் மினியர், ஹாரி-ஒப்பன்ஹிமர் போன்ற உலகப் புகழ் பெற்ற தொழில் நிறுவனங்கள் வசமும் அங்கோலாவின் இயற்கை வளம் முழுமையும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

அதனால்தான் அங்கோலா போராட்டத்தை அடக்க சலாசருக்கு உதவிபுரிய 'நேட்டோ' ஓடோடியும் வருகிறது. அமெரிக்கா போன்ற மேற்கத்திய நாடுகள் கொடுப்பதாகக் கூறப்படும் உதவிகளையல்லாமல் மேற்கு ஜெர்மனி மட்டும் 1250- இலட்சம் மார்க்குகளை அங்கோலா விடுதலை விரும்பிகளை ஒடுக்குவதற்காக வழங்கியுள்ளது.

அங்கோலாவின் இரும்புத் தாது முழுமையும் தனது நாட்டு க்ருப் (Krupp) தொழில் நிறுவனத்தின் வசம்இருக்கும்போது சலாசருக்குப் பாதுகாப்புத் தர மேற்கு ஜெர்மனிக்குக்கசக்குமா என்ன? நொடித்து வரும் 'நேட்டோ'வுக்கு மனப்பூர்வமான உறுப்பு நாடாக நீடிக்கும் போர்ச்சுகல் அங்கோலா எழுச்சியால் நொடித்துவிடப் பார்த்துக் கொண்டா இருக்கும் மற்றைய உறுப்பு நாடுகள்?

இத்துணைப் பக்க பலமும் இருப்பதால்தான் போர்ச்சுகல் சின்னஞ்சிறு நாடாக இருந்தாலும் அதன் ஆதிக்கத்தின் கீழுள்ள அங்கோலா அதைவிடப் பதினான்கு மடங்குப் பெரிதாக இருந்தபோதிலும் சலாசர் சிரித்தபடி இருக்கிறார்; அங்கோலா மக்கள் இதுவரை 2,50,000 வீரர்களை உயிருடன் விடுதலைக்காகப் பலிகொடுத்தப் பின்னரும் இன்னும் போராடியபடியே இருக்கிறார்கள்.

அட்லாண்டிக் கடல் ஒன்றுதான் இரு நாடுகளையும் இணைக்கிறது; மற்றபடி போர்ச்சுகல் இருப்பது ஐரோப்பாவில்; அங்கோலா இருப்பது ஆப்பிரிக்காவில். அது மட்டுமல்ல; பிரான்சையும் இத்தாலியையும், மேற்கு ஜெர்மனியையும் பிரிட்டனையும் சேர்த்தால் எவ்வளவு பெரிய நிலப்பரப்பு கிடைக்குமோ அதைவிடக் கூட பெரிய நாடுதான் அங்கோலா. உலகத்தின் ஒரு மூலையில் நடக்கும் அந்த விடுதலைப் போராட்டத்துக்கு உலகின் பல பாகங்களிலும் ஆதரவுகள் திரண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஆனாலும் அங்கோலா விடுதலைப் போராட்டத்தினால் சலாசரை ஆட்ட முடிந்திருக்கிறதே தவிர, அகற்றமுடியவில்லை; அவரது ஆதிபத்தியம் அந்த அளவுக்குப் பக்க பலத்துடன் இருக்கிறது.

வயலில்உள்ள வளையை அடைக்காமல் எலியை மட்டும் விரட்டிக் கொண்டிருந்து பயனில்லை!

— எஸ். ஆர்.

11-ம் பக்கத் தொடர்ச்சி

துக்கொண்டிருப்பதைக் கண்டு 'பூங்கொடி! சாப்பிடு, சாப்பிடு!" என்று சொல்லிவிட்டுப் பூஞ்சோலையும் சாப்பிடத் தொடங்கினாள்.

பூங்கொடிக்கு அழுவதா சிரிப்பதா என்ற நிலை!

"உங்களால் சாப்பிட முடிகிறாற்போல், என்னால் முடியவில்லையே!" -என்றாள் கவலையோடு பூங்கொடி.

"ஏனம்?" இருகுரல்கள் இணைந்து வந்தன.

"இந்தச் சோறு இன்னமும் கொஞ்சம்சூடாக இருக்கிறதே! சாப்பிட்டால், நெஞ்சிலிருக்கும் என் துணைவருக்குத் துன்பமாயிராதோ! நெஞ்சத்தில் உறையும் என் காதலர் துஞ்சக் கூடாது என்பதற்காகத்தான், சோறு ஆறட்டும் என்று காத்திருக்கிறேன்!"
—என்றாள் பூங்கொடி!

○

தோழியர் மூவர், பல காலம் பிரிந்து பின்னர் 'பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ என்ற நிலையில், பேசமுடியாத பொருளை மிக மிக நுணுக்கமாக விளக்கி விட்டனர்.

இப்படிப் பேசிக்காட்ட இவர்களால் முடிந்ததோ இல்லையோ! திருவள்ளுவப் பெருந்தகையால் முடிந்திருக்கிறது!

முறையே,

கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக் கறிந்து —என்றும்
கண்ணுள்ளின் போகார் இமைப்பின் பருவரார்
நுண்ணியர் எம்காத லவர் —எனவும்
நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து —என்றும்

கூறிவிட்டார்! அவர் கூறியதை அனுபவ வாயிலாய், சோலையில் தூங்கி, கனவுலகினின்றுவிழித்துக் கனவில் காரிகையரைக் கண்டு தெளிந்த இன்பம்! பேரின்பமே!!

—இரா. ந. இமயவரம்பன்

"திருமேனி யார்?"-என்ற வினாவைக் கேட்டு அதிர்ந்த குலசேகரனை, எதிரே இருந்துவந்த சிரிப்பொலி மேலும் குழப்பத்திலாழ்த்தியது.

தனது தேவையற்ற குழப்பத்தைக் கண்டு அவனே வெட்கினான்.

"திருமேனி! இந்த பெயரை விளக்குவது என்பது ஒரு பெரிய வேதாந்தமாயிற்றே!" அதற்கு அவ்வளவு சுலபத்திலா விடை சொல்ல முடியும் என்று அவனும் சிரித்தான்!

"சுலபமாக விடைசொல்ல வேண்டாம் — கொஞ்சம் கடினமாகவே சொல்லுங்கள்!"

"காட்டிலே போய்த் தவஞ் செய்தால்தான், இதற்கு விடை கிடைக்கும்!"

"பரவாயில்லை, போய்த் தவஞ் செய்யுங்கள்!"

"தவஞ் செய்தால் சும்மா இருக்க மாட்டார்களே!"

"ஓகோ, தாங்கள் எதற்காகப் பயப்படுகிறீர்கள் என்பது எனக்குத் தெரிகிறது! தவஞ் செய்த சூத்திரனின் தலையை இராமன் வெட்டிவிட்டானே, அதை எண்ணித்தானே பயப்படுகிறீர்கள்?'

"தலையை வெட்டுவதா? தூ தூ! அதற்கெல்லாம் நான் பயப்படமாட்டேன்! நான் என்ன கோழையா—அவன் வெட்டுகிற வரைக்கும் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க? வாளும் வேலும் ஏந்திவந்தால், அவர்களைக் கண்டு நான் என்ன பயந்தா விடுவேன்? துள்ளிப் பாயும் இனத்தில் பிறந்தவனே அன்றி, தொடைநடுக்கம் கொள்ளும் இனத்தில் பிறந்தவன் அல்லவே நான்! நான் சொல்வது தேவர்களைப்பற்றி! கடுமையாகத் தவஞ் செய்கிறேன் என்று தெரிந்தால் போதும்—கட்டழகிகளை அனுப்பிவிடுவார்கள், என் தவத்தைக் கெடுக்க!"

"சுத்தப்பொய்! தேவலோகத்தில் பெண்களுக்குப் பஞ்சம்! இல்லாவிட்டால் தேவர்கள், பூலோகத்திற்கு எதற்காக அகலிகைகளையும் குந்திகளையும் தேடிக் கொண்டு வரப் போகிறார்கள்!"

"அப்படிக் கேள் சொல்கிறேன்! தேவர்கள் பூலோகத்திற்கு எந்தப் பெண்களை நாடி வந்தார்கள்? வானுலகை விட்டு வந்தவர்களை, வாரியணைந்துக் கூடிக் குலவியவர்கள் எந்தப் பெண்கள்? அகலிகையைக் கெடுத்தான் — குந்திக்குப் புத்திர செல்வம் தந்தான்—அனுசூயைமீது ஆசை கொண்டான் என்றுதான் கேள்விப்பட்டிருப்பாயே ஒழிய, கண்ணகிமீது நாட்டங்கொண்டான்—மாதவியைக் கண்டு மனத்தைப் பறிகொடுத்தான்-மண்டோதரியின் சரியென்ற ஒரு கண் குறிப்பிற்காகக் காத்திருந்தான்--இப்படி நீ கேள்விப்பட்டிருக்கிறாயா? அதற்குக் காரணம் என்னவென்றால்......

"போதும்! எனக்கு மூளை குழம்புகிறது!"

"இப்பொழுதுதான் குழம்புகிறதா — முன்னமேயே குழம்பிவிட்டிருந்ததா?"

"அபாண்டமான பேச்சு"

"எதைச் சொல்கிறாய்!"

"தவத்தைக் கெடுக்க, பெண்களைத் தேவர்கள் அனுப்புவார்கள் என்றீரே—அது!"

"ஓகோ, மூளையைப்பற்றி இடையில் ஆரம்பித்து இடையிலேயே விட்டுவிட்டு, பழையபடியே தேவர் செய்திக்கு வந்துவிட்டாயா! சரி, வா! காட்டிலே ஏகாந்தமாகக் கண்ணை மூடிக்கொண்டு விசுவாமித்திரர் தவஞ் செய்து கொண்டிருந்தார் அல்லவா? அந்த ஞானியின் தவத்தைக் கெடுக்க, மேனகை என்ற தேவமாது எதிரில் வந்து நின்று, மேனியின் எழிலைக் காட்டிச் சிரித்தாள் அல்லவா? 'அழகி என்னைப் பாரும்—களிப்பு மனத்தில் ஊறும், காதல் நரம்பில் ஏறும் — அணைத்தோர் முத்தம் தாரும்—உமது இன்பப் பசி தீரும்!' என்று பண்ணிசைத்து, ஆடிப் பருவ எழிலைக் காட்டினாள் அல்லவா? தாகத்தோடு விசுவாமித்திரர் கண்ணைத் திறந்தார்—தவமெல்லாம் பாழாயிற்று!" என்று சொல்லி, குலசேகரன் சிரித்தான்.

அந்தச் சிரிப்பைக் காண நாணுபவளைப்போல திருமேனி நிலவைப் பார்த்தாள்.

குலசேகரனின் மனத்தில் அந்தப் பழைய சந்தேகம் நன்றாக வேரூன்றி நின்றது. இந்தஇரவிற்குள்ளேயே அது உண்மையா என்று தெரிந்தாக வேண்டும் என்ற எண்ணத்தோடு, மேலும் பேச்சுக் கொடுக்க நினைத்தான்.

எதைப் பற்றி இப்பொழுது புதிதாகப் பேச்சை ஆரம்பிப்பதுஎன்று யோசித்தான்.

"அரிகர புத்திரனை அங்கே மனைவிக்குக் காவல் வைத்துவிட்டு, அர்த்தராத்திரியிலே இப்படி ஊர் சுற்றுவது சரியா?" என்று படகிலிருந்தபடியே திருமேனி கேட்டது அவன் கவனத்திற்கு வந்தது.

"திருமேனி!' என்று அவன் அழைத்ததும், நிலவைப் பார்த்துக் கொண்டிருந்தவள் பார்வையைத் திருப்பினாள்.

"யாரோ அரிகர புத்திரனைப் பற்றிச் சொன்னாயே......"

"ஆமாம், மறந்துவிட்டல்லவா இவ்வளவு நேரமும் பேசிக்கொண்டிருந்து விட்டேன்! அய்யோ, எனக்கு என்ன ஆபத்து வர இருக்கிறதோ?"

"எதற்காகத் திருமேனி இப்படிப் பயப்படுகிறாய்?"

"நீங்கள் இந்திரர்தாமே? அதை மறந்துவிட்டு இப்படியெல்லாம் பேசிவிட்டேனே!"

எப்படித் தப்பிச் செல்வது என்று நடுங்குபவளைப் போல,

அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள்.

சந்தேகம் உண்மையாகிவிடும் போலிருக்கிறதே என்ற மகிழ்ச்சியில் குலசேகரன் சிரித்தான்.

"திருமேனி, நிச்சயமாகச் சொல்லுகிறேன்—சத்தியமாகச் சொல்லுகிறேன்—நான் இந்திரனே அல்லன்!"

"அப்படியானால்?"

"மறந்துவிட்டாயா, நான்தான் பூஞ்சோலை!"

"ஆமாம்! ஆமாம்! பூஞ்சோலை, மறந்தே விட்டேன்!"

"அரிகர புத்திரன் என்றுயே யார் அவன்!"

"அவனைத்தானே உமது மனைவிக்குக் காவலாக வைத்துவிட்டு வந்தீர்!...ஓகோ. இல்லை! இல்லை! நீங்கள்தாம் பூஞ்சோலையாயிற்றே!'

"பூஞ்சோலை என்பது மட்டுமல்ல, எனக்கு மனைவியும் கிடையாது என்பதை நீ தெரிந்து கொள்ள வேண்டும்! மனைவி இல்லை என்பது மட்டுமல்ல, எந்த மங்கையின்மீதும் எனக்குக் காதல் இல்லை என்பதையும் உன்னிடம் சொல்லி வைக்கிறேன்!"

"காதலா?"

"ஏன்? தெரியாதா?"

"எனக்கென்ன பைத்தியமா—தெரிந்ததை ஒருமுறை உங்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு?"

"ஒத்த பருவமும் உள்ளமும் உருவமும் கொண்ட வாலிபனும் கன்னியும், இளமையின் துடிப்பால் ஒன்றுவார்கள்! அப்படி அவர்களைப் பிணைக்கும் சக்தியிருக்கிறதே, அதற்குத்தான் காதல் என்று பெயர்!"

'காதல் என்றால் ஆணையும் ஆணையும் ஒன்றுக்காதா?'

'திருமேனி! இது வேடிக்கையான கேள்வி!'

'இந்த வேடிக்கையான கேள்விக்கு விடைதான், நான் சொல்லப் போகும் அந்த அரிகரபுத்திரனின் கதை!' என்று சொல்லித் திருமேனி சிரித்தாள்.

2—7
கசப்பு ஒரே கசப்பு!

"உட்கார்ந்து கதையைச் சொல் திருமேனி!" என்று குலசேகரன் சொல்லிக்கொண்டே ஏரிக்கரையின் மீது உட்கார்ந்தான்.

"முடியாது? நின்றுகொண்டுதான் சொல்வேன்!" என்று தோள்களை ஆட்டிக் கூறி, கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டு, முகத்தை ஒரு பக்கமாகத் திருப்பி நிலவைப் பார்த்தாள், திருமேனி.

"சரி நின்றுகொண்டே சொல்!"

"நின்றுகொண்டு சொல்லவேண்டுமா? என்ன கட்டளையிடுகிறீர்—மன்னர் என்ற நினைப்போ? முடியாது, உட்கார்ந்துகொண்டுதான் சொல்வேன்!" என்று உதட்டை மடக்கி அழகு காட்டிவிட்டு, அவனுக்கு எதிரே உட்கார்ந்தாள்.

வெண்ணிலவின் ஒளிக் கதிர்கள் அந்த வேல் விழியாளின் முகத்தில் நேராக விழுந்தன. அவளது கூந்தலை மட்டுமல்ல மேலாடையைக் கூடத் தென்றல், ஆட்டியசைத்துக் கொண்டோடியது.

அந்த இளங்குமரியை அவன் இமைகொட்டாது உற்றுப் பார்த்தான். அவளது உதடுகளின் முனையில் முதிராத ஒருமுறுவல்! நாணத்தால் கண்ணிமைகள் கீழே இறங்கின! விரல்கள் மண்ணிலே தடவின—ஒரு வேப்பங்காய் அகப்பட்டது! அந்தக் காயை உருட்டிக்கொண்டே, கடைக்கண்ணால் ஒரு முறை அவனைப் பார்த்தாள்!

அழகியின் கண் மின்னல், அவனது கண்ணின் வழியே நெஞ்சில் பாய்ந்தது! பெருமூச்சு விட்டபடி, பார்வையை ஏரியினுள் இறக்கினான்! கட்டியிருந்த கயிற்றை அறுத்துக்கொண்டுபோக, படகு அங்கே திமிறிக்கொண்டிருந்தது. அந்த அன்னப் படகைப்போலவே, அவனது இதயத்துணர்ச்சிகளும், ஏதோ ஒரு கட்டை அறுத்துக்கொண்டு வெளிவரத் துடிப்பதாக அவன் உணர்ந்தான்.

கலகலவென்று அவள்சிரித்தாள்!

படகைவிட்டுப் பார்வையைத் தூக்கினான்.

அவள் தன்னைப் பார்த்ததும், அவள் திரும்பவும் சிரித்துவிட்டு, 'ஈ! ஈ!' என்று அழகு காட்டினாள்.

அதே பழைய பைத்தியக்காரச் சிரிப்பு! அதே பழைய வெகுளிப் பார்வை! சில நொடிகளுக்கு முன்னர், கடைக்கண்ணால் பார்த்துக் குறுநகை செய்தாளே அவளுக்கும்-இவளுக்கும் எவ்வளவோ வித்தியாசம்!

அந்த மாற்றத்தை எண்ணி, குலசேகரன் மனதிற்குள்ளேயே சிரித்துக்கொண்டான்.

“ஐயோ! உங்கள் பார்வை-ஈ! ஈ! எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை!”

“ஆனால் உன் பார்வை எனக்கு மிகவும் பிடிக்கிறது, திருமேனி!”

“இந்தப் பேச்சு, எனக்கு ஒரே கசப்பாக இருக்கிறது.”

“உன் பேச்சோ எனக்கு ஒரே தித்திப்பாக இருக்கிறது!”

“வேப்பங்காய் கசப்பா, தித்திப்பா?”

“கசப்பு!”

“பலாச்சுளை?”

“தித்திப்பு!”

“கசப்பு—தித்திப்பு! இரண்டிற்கும் என்ன வித்தியாசம் — சொல்லுங்கள் பார்ப்போம்!”

“பகல்—இரவு! அதே வித்தியாசந்தான்!”

“பகல்! இரவு! இவற்றில் எது கசப்பு? எது தித்திப்பு?”

“அது மனதையும் சூழ்நிலையையும் பொறுத்தது! உதாரணமாக, வேம்பாய் இருந்தது, நேற்றிரவு! கரும்பாய் இருக்கிறது இன்றிரவு!”

“சுத்தத் தப்பு! எங்கேயாகிலும் வேப்பங்காய் தித்திப்பதும் பலாச்சுளை கசப்பதும் உண்டா? கேட்டால் சிரிப்பார்கள்—பைத்தியமோ என்று உரைப்பார்கள்!”

“சிரிப்போர் சிரிக்கட்டும் உரைப்போர் உரைக்கட்டும்! யார் என்ன சொன்னபோதிலும், உண்மை ஒரு நாளும் பொய் ஆகாது! பொய் ஒரு போதும் உண்மையாகாது!”

ஆனால் கசப்பு தித்திப்பாகிவிடும்! தித்திப்பு கசப்பாகிவிடும்!

“ஏன் ஆகாது? மனதிற்கு உகந்தவர்களோடு பேசும்போது வேப்பங்காயைத் தின்றால்கூடத் தித்திப்பாக இருக்கும்! வேண்டாதவர்களோடு பேசும்போதும்—தனிமையின் வேதனையில் சிரிக்கும்போதும் — பலாச்சுளைகூடக் கசப்பாகத்தான் இருக்கும்!

“அப்படியா? இந்த வேப்பங்காய் எனக்குக் கசக்குமா? இனிக்குமா” என்று கையிலிருந்த காயை அவனிடம் காட்டினாள்.

“கடித்துப் பார் — தெரிந்துவிடுகிறது!” என்று குறும்புப் புன்னகையோடு அவன் சொன்னான்.

அதை அவள் கடித்து, “கசப்பு! கசப்பு! ஒரே கசப்பு!” என்று முகத்தைச் சுளித்துக்கொண்டே, ‘தூ தூ’ என்று கீழே துப்பினாள்.

“அட அட! தித்திப்பாக இருக்குமென்றல்லவா, எண்ணினேன்!” என்று மோவாயைத் தடவிக்கொண்டே அவன் சொன்னான்.

“ஈ! ஈ! வேப்பங்காய் தித்திக்குமாம் — பைத்தியக்காரப் பேச்சு!” என்று அவள் அழகு காட்டினாள்.

“ஆணையும் ஆணையும் ஒன்றாக் காதா காதல் என்று கேட்டாயே, அதைவிட இது ஒன்றும் பைத்தியக்காரப் பேச்சு அல்ல!”

“அது பைத்தியக்காரப் பேச்சா? கிடையவே கிடையாது! ஆணை ஆண் பார்த்துக் காதலித்திருக்கிறான்! அந்தக் காதலில் கனிந்தவன்தான்—அரிகரபுத்திரன்?”

“அந்த அரிகர புத்திரனைப்பற்றிச் சொல்வதாக ஆரம்பித்துத்தான், கசப்புக்கும் இனிப்புக்குமிடையே ஊஞ்சலாட ஆரம்பித்துவிட்டாயோ! கதைகேட்பதென்றால், எனக்குக் கொஞ்சம் ஆசை! சொல், திருமேனி!”

“அது கதையல்ல — உண்மையிலேயே நடந்தது! நடக்காதது, நம்பமுடியாதது என்று யாராவது சொன்னால், அவர்கள் நாக்கை அறுத்துவிடுவார்கள்! கண்ணில் விளக்கெண்ணெயை ஊற்றிக்கொண்டு — கத்தியை தீட்டிக்கொண்டு — அதற்கென்று சிலர் பாயத் தயாராக இருக்கிறார்கள், எச்சரிக்கை! எச்சரிக்கை!”

“நான் எச்சரிக்கையாகத்தான் இருக்கிறேன்! நீ அரிகரபுத்திரனின் கதையைச் சொல்!”

“கதையைப்பெரியதாகச்சொல்ல வேண்டுமா—சுருக்கமாகச் சொல்ல வேண்டுமா?”

“பெரியதாகச் சொல்.”

“பெரியதாகச் சொல்லவேண்டுமா! முடியாது! நீங்கள் சொல்வதைப்போல நடந்துகொள்ள நானென்றும் அடிமைப் பெண்ணா என்ன? கதையை மிகவும் சுருக்கமாகத்தான் சொல்வேன் — என்ன சரிதானே?”

“உன் விருப்பம் எப்படியோ அப்படிச்சொல்! நீ எது சொன்னாலும் கேட்க, நான் தயாராக இருக்கிறேன்!”

“அப்படி வாருங்கள் வழிக்கு! கேளுங்கள்கதையை!…உம்! என்ன கதை சொல்வதாகச்சொன்னேன்!”

“அரிகரபுத்திரன் கதை!”

“அரிகரபுத்திரன்? யார் அவன்?”

“பாழாய்ப்போயிற்று போ! அந்தக் கதையைச் சொல்வதாக இவ்வளவு நேரமும் எனக்கு ஆசை காட்டிவிட்டு — கடைசியில் அவன் யார் என்று என்னையே கேட்க ஆரம்பித்துவிட்டாயே!”

“அரிகரபுத்திரன்! எங்கோ கேட்டபெயர்தான்! ஐயையே, நினைவிற்கேவரமாட்டேன் என்கிறதே!”

“அப்படியா?”

“ஆமாம், நினைவிற்கு வந்துவிட்டது! கடலைத்தாண்டி இலஙகைக்கு வந்தான்! சேசே, தப்பு தப்பு! அவன் வாயுபுத்திரன் ஆயிற்றே! மனைவியை வைத்துச் சொக்கட்டான் ஆடினான் — சேசே. அவன் எமபுத்திரன் அல்லவா. அது சரி. இந்த அரிகரபுத்திரன் யார்—உமக்குத் தெரியுமா?”

“நல்ல கதையாக இருக்கிறதே, இது!”

“எது? ஓகோ, அரிகரபுத்திரன் கதையா? நல்ல கதையா அது? அப்படியானால் அது உமக்குத் தெரியும் என்று சொல்லுங்கள்!”

“என்ன செய்வது — நீ தான் மறந்துவிட்டாயே! நானாவது ஞாபகப்படுத்திப் பார்த்துச் சொல்லித்தானே ஆகவேண்டும்! சரி கேள்—சொல்கிறேன்! ஒருசமயம், விஷ்ணு மோகினியாக உருவுகொண்டார்! மோகினி என்றால் எவ்வளவு அழகான பெண் தெரியுமா—அதை உன்னால் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியாது! உன்னால் மட்டுமல்ல, என்னால்கூடத்தான்! அந்த அழகு இருக்கட்டும், அதனால் ஏற்பட்ட அனர்த்தத்தைக்கேள்! மரக்கிளையினின்றும் தொங்கிய ஓர் மலர்க்கொடியை அந்த மோகினி பிடித்துக்கொண்டு, அங்க அவையவங்களின் கவர்ச்சி வெளியில் தெரிய, அதரத்தில் புன்னகை நெளிய, விழிசுழல நின்றிருந்தாள்! கங்கைவார் சடையன் அந்த நேரத்தில் அவ்வழியாக வந்தார்! தன்னந்தனியாக தளிர்மேனியாள் ஒருத்தி நிற்பதைக் கண்டதும், அவர் ‘ஆ!’ என்று ஆச்சரியத்தோடு சில நொடிகள் நின்றுவிட்டார்! திறந்தவாயை மூட, மேலும் சில நொடிகள்பிடித்தன! ஆச்சரியம் கொஞ்சம் அடங்கியதும், அந்தச் சுந்தரியை மேலும் கீழுமாகப் பார்த்தார்! அவளது கண்ணைப் பார்த்தார்! கன்னத்தைப் பார்த்தார்! இடையைப்பார்த்தார்! கொடிபோல அந்த இடை அசைவதைப் பார்த்தார்!……”

“சரி சரி! அவளைப்பார்த்தார்—அதுபோதும்! வர்ணனை வேறு வேண்டுமா அதற்கு!”

“அந்த உல்லாசியின் உடல் கவர்ச்சி அவரது உதிரத்தின் ஓட்

டத்தை அதிகமாக்கிற்று! மோகம் மிஞ்ச அந்த மோகனாங்கியின் அருகே சென்று, 'வண்ணச்சிலையே! வானொளியே கற்கண்டே! கனியமுதே! மாமேருவே! மன்மத பாணமே!......''

"சேசே! இதென்ன என்னைப் பார்த்து இப்படியெல்லாம் சொல்ல ஆரம்பித்துவிட்டீர்?''

"சே சே! உன்னைப்பார்த்து எங்கேயாகிலும் அப்படியெல்லாம் நான் சொல்வேனா? நீ என்ன பல்லைக்காட்டிப் பள்ளத்தில் தள்ளும் மோகினியா? இல்லையே! நான் என்ன, முனிவர் மனைவியானாலும், முன்பின் தெரியாத கண்ணழகியானாலும், கண்டதும் சபலங் கொள்கிறவனா? இல்லையே!''

"உம்! பிறகு என்ன கதை?''

"பிறகு என்ன—ஒரு குழந்தை பிறந்தது! அந்தக் குழந்தைக்குத் தான் அரிகரபுத்திரன் என்று பெயர்!''

"ஆமாம், ஆமாம்! இப்பொழுது அந்தக் கதை எனக்கு நினைவிற்கு வந்துவிட்டது!''

"அப்படியா, சொல் பார்க்கலாம்!''

"நீங்கள் தான் சொல்லிவிட்டீரே —நான் வேறு சொல்லவேண்டுமா?'' என்று கூறிக்கொண்டே எழுந்தாள்.

"இதற்குள் எழுந்துவிட்டாயே?''

"எதற்குள்? இப்பொழுது எவ்வளவு நேரமாகிவிட்டது தெரியுமா? இருட்டிவிட்டால், எப்படி அரண்மனைக்குப்போவது? இதோ பாருங்கள், சூரியன்மறையப்போகிறான்!'' என்று சந்திரனை அவள் சுட்டிக் காட்டிவிட்டு, ஏரிக்கரையைவிட்டு இறங்கி ஓட ஆரம்பித்தாள்.

"திருமேனி! திரும்பவும் நாம் எங்கே, எப்பொழுது, சந்திப்பது?'' என்று அவன் உரத்தக் குரலில் கேட்டான்.

"நினைத்த நேரத்தில், நினைத்த இடத்தில் சந்திக்கலாம்!!'' என்று கூறிக்கொண்டே, அந்த மான்விழியாள் மரஞ்செடிகளுக்கு இடையே மறைந்துவிட்டாள்.

திருமேனி சென்ற திசையிலேயே பார்த்துக்கொண்டு நின்றிருந்த குலசேகரன், சிறிதுநேரம் கழித்து முகத்தைத் திருப்பினான், படகு அவன் கண்ணில்பட்டது. நிலவொளியிலே படகிலே சிறிதுதூரம் சென்றுவிட்டு வரலாமே என்ற ஆசை அவனுக்கு உண்டாயிற்று.

ஆனால் வெள்ளி முளைத்துவிட்ட தென்பதைக் கண்டதும், புத்த விகாரத்திற்குத் திரும்பிவிட வேண்டுமென்று நினைத்தான்.

ஏரிக்கரையை விட்டுத் திருமேனி இறங்கிய வழியே இறங்கி, நடந்தான். சிறிதுதூரம் சென்றதும், திடீரென்று தலைப்பாகையினுள் இருந்த தூமகேதுவின் ஓலை நினைவிற்கு வந்தது. உடனே குன்றின் அடிவாரத்திற்குத் திரும்பிச் சென்று அந்த ஓலையை முன்

போலவே பாறையின் இடுக்கில் வைத்துவிட்டு, ஊரைநோக்கி வேகமாக நடந்தான்.

ஒரு வாரத்திற்கு மேலாகிவிட்டது. ஆனால் திருமேனியை எங்கும் அவனால் பார்க்க முடியவில்லை. அவளைப்பார்க்கவேண்டுமென்ற ஆவல், நாளுக்குநாள் அவன் மனதில் வளர்ந்துகொண்டே சென்றது.

ஒரே இரவில், தமயந்தியின் ஓலையைக் கண்டெடுத்ததையும், ஏரிக்கரைமீது எழிலரசி திருமேனியோடு கதைபேசிக் களிப்புக்கொண்டதையும் நினைத்துப் பார்த்துப் பார்த்துப் பூரிப்படைந்தான்.

அந்தப் பூரிப்பு இன்னும் அதிகமாகும் விதத்திலே, அதிதீவிரமாக இலங்கை அரசனின் போக்கை அறிவொளியடிகள் எதிர்க்க ஆரம்பித்துவிட்டார்.

போரை ஆதரிப்பது, தமிழ் மண்ணில் பௌத்தத்திற்குச் சமாதி கட்டுவதாகும் என்று அவர் பேசவும், அந்தக் கருத்திற்குச் செவி சாய்க்கும்படியாகவும் பல பௌத்தத் துறவிகளைச் செய்துவிட்டார்.

தமிழ் நிலத்திலே, மதப்போராட்டங்கள் உச்ச நிலையிலிருந்தன. சைவமா? வைணவமா, பௌத்தமா என்ற கேள்விக்கு விடைகாண, மன்னர் சிலர் படையெடுக்கவும் தயாராக இருந்தனர். ஏதோ ஒரு கட்டு அவர்களை அப்படிச் செய்யாமல் தடுத்துவந்தது. அந்தக் கட்டை உடைத்துஎரிகிறவீட்டில் பிடுங்கின துலாபம்என்ற முறையில் போர் தொடுக்கப் பராக்கிரமபாகு துடிதுடித்தான். அந்த முயற்சிக்குத் தடையாக இருக்கிறார் அறிவொளி அடிகள் என்ற ஆத்திரம் அவனுக்கு உண்டாயிற்று.

இலங்கை அரசனின் ஆத்திரத்திற்கு ஏன்ஆளாகவேண்டுமென்று அறிவொளியடிகள் பயப்படவில்லை—தம் முயற்சியினின்றும் தளரவும் இல்லை. போரை நிறுத்தவேண்டியது தம்கடமைகளில்ஒன்று என்ற உறுதியால் உந்தப்பட்டு அவர் செயலாற்றி வந்தார்.

கிழவி சங்கம்மாள் வீட்டிற்குச் சாப்பிட ஒரு நாள் குலசேகரனை அடிகள் அழைத்திருந்தார்.

அறிவொளியடிகளும் குலசேகரனும் அஞ்சலையும் உட்கார்ந்து சாப்பிட, அவர்களுக்கு எதிரே கிழவி சங்கம்மாள் உட்கார்ந்து மயில் விசிறியினால் விசிறிக்கொண்டிருந்தாள்.

அவர்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்த அறையினுள் கையில் பழத் தட்டோடும், முகத்தில் புன்னகையோடும் ஒரு பெண் நுழைந்தாள். அப்படி நுழைந்தவளைக் கண்டதும் குலசேகரன் திடுக்கிட்டுவிட்டான். அவள் வேறு யாருமல்ல, தூமகேதுவின் கையாளான அந்தத் தமயந்தியேதான்!

(வளரும்.)